# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


02.09.2018 ஆண்டின் பொதுக்காலம் 22ம் ஞாயிறு - திருப்பலி 02

05.09.2018 புனித அன்னை தெரசா - திருப்பலி 03

08.09.2018 புனித கன்னிமரியாவின் பிறப்புப் பெருவிழா - திருப்பலி 04

09.09.2018 ஆண்டின் பொதுக்காலம் 23ம் ஞாயிறு - திருப்பலி 06

14.09.2018 திருச்சிலுவையின் மகிமையின் விழா - திருப்பலி 07

15.09.2018 புனித அன்னை மரியாளின் துயரங்கள் - திருப்பலி 08

16.09.2018 ஆண்டின் பொதுக்காலம் 24ம் ஞாயிறு - திருப்பலி 10

17.09.2018 புனித இராபர்ட் பெல்லார்மின் - திருப்பலி 11

21.09.2018 புனித மத்தேயு - திருப்பலி 12

22.09.2018 அருளாளர் ஜோசப் கலசான்ஸ் - திருப்பலி 13

23.09.2018 ஆண்டின் பொதுக்காலம் 25ம் ஞாயிறு - திருப்பலி 14

27.09.2018 புனித வின்சென்ட் தே பவுல் - திருப்பலி 16

29.09.2018 புனித மிக்கேல், கபிரியேல், இரபேல் அதிதூதர்கள் திருப்பலி 17

30.09.2018 ஆண்டின் பொதுக்காலம் 26ம் ஞாயிறு - திருப்பலி 18


# பகுதி 2: விசுவாசத்தில் வளர...


துணை இரட்சகி அன்னை மரியாளின் பிறப்பு 19

அருளாளர் ஜோசப் கலசான்ஸ் - வாழ்வு தரும் பாடம் 21

வானதூதர் வழியாகப் பேசும் இறைவன் 24

திருச்சபை செய்திகள் 26

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 02.09.2018 ஆண்டின் பொதுக்காலம் 22ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. D.V.R. ராஜா

I. இ.ச. 4:1-2,6-8 II. யாக். 1: 17-18,21-22,27 மாற்கு 7: 1-8,14-15,21-23

அன்பின் இறைச்சமூகமே, சட்டங்களும் முறைமைகளும் மனிதருக்காகத் தானே அன்றி மனிதர்கள் சட்டங்களுக்காக அல்லர் என்பதுவே இன்றையத் திருப்பலியின் மையக் கருத்தாய் விளங்குகிறது. தொடக்கக் காலத்தில் மனிதரோடு நெருங்கியிருந்த இறைவன் தன் கட்டளைகள் முறைமைகளின்படி நம் மூதாதையார் வாழ்ந்ததால் அவர்களுக்கு வாக்களித்த நாட்டில் வளமையான வாழ்வைத் தர விரும்பினார். எனவேதான் சட்டங்களையும் முறைமைகளையும் தந்து அவற்றுள் ஒன்றும் சேர்க்கவோ விலக்கவோ கூடாது என்றுரைத்தார். இதையே இயேசுவும் தமது போதனையிலும் வாழ்விலும் எண்பித்தார். ஆனால் அவரை குற்றப்படுத்த பரிசேயரும் அறிஞரும், இயேசுவின் சீடர்கள் தீட்டான காரியங்களைச் செய்து சட்டத்தை மதிக்காமல் மீறுவதாகக் குற்றம் சாட்டினர். இவர்களின் உள்ளுணர்வுகளை அறிந்து "இவர்கள் உதட்டால் ஆண்டவரைப் போற்றுகிறார்கள், உள்ளமோ வெகு தொலைவில் இருக்கிறது" என்று இறைவாக்கினர் கூறியதை இயேசு சுட்டிக்காட்டி, வெளியிலிருந்து வரும் எதுவும் மனிதனைத் தீட்டுப்படுத்தாது, மாறாக உள்ளிருந்து வரும் அகந்தை, களவு, கொலை, கொள்ளை, காமம், வஞ்சகம் போன்ற எண்ணற்ற அனைத்து தீவினைகளின் வெளிப்பாடுகள் மனிதனை மாசுப்படுத்தும் என்று சுட்டிக் காட்டுகின்றார்.

எனவே இப்படிப்பட்ட ஒழுக்கக் கேடுகளை அகற்றி ஒளியின் பிறப்பிடமான இறைவனிடமிருந்தே எல்லா நற்கொடைகளும் அருளப்படும் என்பதை உணர்த்திட, படைப்பனைத்திற்கும் முதற்கனியாய் நாம் விளங்க உண்மையை அறிவிக்கும் வார்த்தையால் நம்மை ஈன்றெடுக்க அவர் திருவுளப்படி நாம் வாழ, உள்ளத்தில் உள்ள எல்லா அசுத்தங்களையும் அகற்றி, ஆண்டவர் அருளவிருக்கும் கொடைகளைப் பெற்றுக்கொள்ள நம்மைச் சீரமைத்துக்கொள்ள இறையருள் வேண்டி இத்திருப்பலியில் உருக்கமாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. **திருச்சபைக்காக:** அன்புத் தந்தையே இறைவா, நீர் விடுத்துச் சென்ற இறையரசுப் பணியைத் தமது வாழ்வாகக் கொண்டுள்ள உம் அடியாராகிய எமது திருத்தந்தையை நீர் தொடர்ந்து பாதுகாத்து, நல்ல உடல் நலன் தந்து நெடுங்காலம் உமது சேவையைத் தொடரவும் எதிர்வரும் சோதனை, நெருக்கடியான சவால்களை நேர்த்தியாய் அணுகும் ஆற்றலைத் தரவும், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர்,





மற்றும் திருஅவையையும் கிறிஸ்துவ மக்களையும் இறைவழி நடத்திட வேண்டிய ஆற்றலை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. **பங்கு மக்களுக்காக:** இரக்கமுள்ள இறைவா, எம் பங்கு மக்கள் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களை இறைச்சிந்தனைக்குட்படுத்தி இறைவனின் ஆலோசனையின்படி நம்பிக்கையில் தளராமல் குடும்பங்களை அமைதியோடு நிர்வகிக்கும் ஆற்றலைப் பொழிந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. **இளையோருக்காக:** கனிவுள்ள இறைவா, மாறிவரும் உலகச் சூழலாலும் உலகமயமாக்கலின் மூலம் அறிவியல் சாதனங்களின் வாயிலாக இளையோர் பாதைத் தவறிச் செல்லாதிருக்கவும் அவர்கள் இறைஞானம், மனக்கட்டுப்பாடு பெற்று இறைவழியில் பயணிக்க வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. **நாட்டுத் தலைவர்களுக்காக:** நாட்டுத் தலைவர்கள் சுயநலமின்றி பொதுநோக்கோடு எல்லா மக்களின் தேவைகளையும், குறிப்பாக நடுத்தர ஏழைமக்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்படாமல் பொருளாதாரத்தில் உயர்வு காண்பதையும் செயல்படுத்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 05.09.2018 புனித அன்னை தெரேசா திருநாள் திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

இன்று நாம் புனித அன்னை தெரேசா விழாவையும், ஆசிரியர் தினவிழாவையும் கொண்டாடி மகிழ்கின்றோம். யுகோஸ்லோவியாவில் ஸ்காபேஸே நகரில் செல்வ செழிப்புடன் வாழ்ந்த நிக்கோலா-தீரானா பெற்றோர்களுக்கு மகளாக 1910 ஆகஸ்ட் 26 அன்று பிறந்தவர் அன்னை தெரேசா. இவரின் இயற்பெயர் ஆக்னஸ் கொன்சகா பெர்ஜாகஸ்யு. இவர் தமது 9ம் வயதில் தந்தையை இழந்தார். அவர்கள் வாழ்ந்த திருஇருதய பங்கு கோவிலுக்கு 1925ஆம் ஆண்டில் இயேசு சபை குரு ஜாம்ரென்கோலிக் வந்தார். அவர் புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை வாசிக்க தம் பங்கு இளைஞர்-இளம் பெண்களைத் தூண்டினார்.

மேலும் இந்தியாவில் கல்கத்தாவில் பணியாற்றும் குருக்கள் தங்கள் பணிகள் பற்றி எழுதிய கடிதங்களையும் வாசிக்கக் கொடுத்தார். இவற்றை மிக ஆர்வமுடன் வாசித்த ஆக்னஸ் தாமும் இந்தியா சென்று பணியாற்ற வேண்டுமென்ற உந்துதலால் 1926 ஜனவரி 6ம்நாள் கல்கத்தா வந்தார். சிறுமலர் தெரேசாவின் **"ஓர் ஆன்மாவின் வரலாறு"** படித்து தெரேசாமீது பற்றுக்கொண்ட ஆக்னஸ் தமது பெயரையும் 1929 மே 24 அன்று முதல் தெரேசா என்று மாற்றிக் கொண்டார். 1931 மே 24 அன்று முதல் வார்த்தைப்பாடும் 1937 மே 14 அன்று நித்திய வார்த்தைப்பாடும் கொடுத்தார். அதன் பிறகு கல்கத்தாவில் உள்ள புனித மரியன்னைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். கல்கத்தா

சேரிகளில் மக்கள் படும்பாட்டையும் மதிக்கப்படாத உயிர்களையும் கண்ட தெரேசா அவர்களுக்காகப் பணியாற்ற முடிவு செய்தார். 1948 ஆகஸ்டு 16அன்று 5ரூபாயுடனும் 3சேலைகளுடனும் சமூகத்தில் ஓரங்கட்டப் பட்டவர்களுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்த அன்னை, இறப்போர் நல இல்லம் ஆரம்பித்தார். இத்துடன் தொழுநோயாளர் இல்லம், குழந்தைகள் காப்பகம், கல்விப் பணி என்னும் அறப்பணியையும் 1963 மார்ச் 25 அன்று சகோதரர்கள் சபையையும் ஆரம்பித்தார்.

இரக்கக் கரம்விரித்த அன்னை, சந்தித்தச் சவால்கள் கொஞ்ச நஞ்சமல்ல, பட்ட துன்பங்களோ எண்ணிலடங்கா. தியாகமில்லாத வாழ்க்கை சூனியம் என்றார். கவலைகளின் சுமைகளைத் தாங்க முடியாதபோது இந்த "ஏழை மழலைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன் என்றார் அன்னை. மக்களின் மனங்களில் இறைவனின் கருணையைப் பரப்பினார். 1997 செப்டம்பர் 5 அன்று இறைவனடி சேர்ந்தார். இன்று ஆசிரியர் தினத்தைக் கொண்டாடும் நாமும் நல்லதொரு ஆசிரியராகப் பணியாற்றவும், அன்னையைப்போல் ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்டோருக்கும் உதவிடவும் நல்ல மனஉறுதியைத் தரும்படி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நான் எல்லா ஊர்களிலும் இறையாட்சியைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்க வேண்டும் இதற்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்" எனச் சொன்ன இயேசுவே, உம்மால் தேர்ந்துக்கொள்ளப்பட்டத் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் நேரிய வழியில் இறைப்பணி புரியவும் நற்செய்தியை அறிவிக்கவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. தாம் செய்த வேலைக்கேற்ப ஒவ்வொருவரும் தம் கூலியைப் பெறுவர் என்பதற்கிணங்க எமது செயல்களில் நீதி, நேர்மை, இரக்கம் பிறருக்கு உதவும் பண்பு ஆகிய நற்குணங்களால் எம்மை வழிநடத்தும்படியும் இரக்கப்பணி செய்யும் கருணை இல்லங்கள் பாதுகாக்கப்படவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. நடமாடும் புனிதை, வாழும் புனிதை என உலகோரால் போற்றப்பட்ட புனித அன்னை தெரேசா போன்று நாமும் நோயுற்றோரை, அனாதைகளை, கைவிடப்பட்டோரை, ஏழைகளைப் பராமரிக்க நம்மாலான பொருள் உதவிகளைச் செய்திட நல்ல தாராள மனதைத் தரும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 08.09.2018 தூய கன்னிமரியாவின் பிறப்புப் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

இறையேசுவின் அன்பிலும் கன்னிமரியாவின் அரவணைப்பிலும் அருள்வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் சகோதர சகோதரிகளே, மனித குலம் மீட்படைய மரியா தம்மை அடிமையாக்கினார். ஏவாள் தன் கீழ்ப்படியாமையால் மனுக்குலத்தைப் பாவத்தில் தள்ளினாள். மரியா





மனுக்குலத்திற்கு நல்வாழ்வைப் பெற்றுத் தந்தாள். மனுக்குல நல்வாழ்வின் தொடக்கமான மரியாவின் பிறப்பு அதிசயமானது, அற்புதமானது. மரியாவின் தந்தை ஜோக்கிம் என்பவர் வசதி படைத்த பணக்காரர் ஆவார். இயேசுவின் 12 குலங்களில் குறிப்பிடத்தக்கவர். ஆலயத்திற்குத் தாராளமாய் காணிக்கைகளையும், நிதியுதவிகளையும் செய்வதில் பெயர் போனவர். ஆனாலும் இவருக்கும் இவரது மனைவி அன்னாளுக்கும், குழந்தை பாக்கியம் இல்லாமல் வேதனையிலும் அவமானத்திலும் வாடினர். அவர்களது அவமானம் எந்தளவிற்கு இருந்ததென்றால் அன்னாளின் பணிப்பெண்ணான ஜீட்தின் கூட அவரை ஏளனப்படுத்தினார் என்று சொல்லப்படுகிறது. வயதான காலத்தில் ஆபிரகாம் சாராவைப் போன்று, செக்கரியா எலிசபெத்தம்மாவைப் போன்று அவர்களுக்குக் குழந்தைப்பேறு கிடைக்கும் என்று தனித்தனியாக வானதூதரால் வெளிப்படுத்தப்பட்டனர்.

அவ்வாறே அன்னாள் மரியாவைப் பெற்றெடுத்தார். பிறந்த குழந்தையைப் பாசத்தோடு அவர்கள் வளர்த்து 3வயதில் குழந்தை மரியாவை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்க நேர்ந்துக்கொண்டனர். அன்னாளும் ஜோக்கிமும் தங்களது செல்ல மகளைத் தூய்மையாகவும், பாதுகாப்பாகவும் வளர்த்தனர். இதனால் கடவுளின் மகனான இயேசு பிறந்து உலகத்தை மீட்பதற்குத் தம் கருவிலும், இதயத்திலும், வாழ்விலும் முழுமையான இடம் தந்தவர் அன்னை மரியா. மரியா என்பது ஒரு மந்திரப் பெயர். அள்ளிக் கொடுக்கும் தாய். நம்பியவர்களை ஒருபோதும் கைவிடாத பாதுகாவலி. தன் மகன் இயேசுவிடம் பரிந்துபேசி, கேட்டதைக் கேட்டபடியே பெற்றுத்தருபவள். நாமும் அன்னை மரியாவைப்போல வாழ பிறப்புப் பெருவிழா திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம். ஆரோக்கிய அன்னையின் அருளையும் பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. கருணையே உருவான இறைவா, எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றத் தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வும் வழியுமான இறைவா, புனித கன்னிமரியா வாழ்ந்த காலங்களில் தனக்கு வந்த அனைத்து துன்பங்களையும் "ஆண்டவரின் சித்தம்" என்று ஏற்றுக்கொண்டதுபோல எங்கள் பெண்களும் அன்றாட வாழ்வில் வரும் சிறுசிறுத் துன்பங்களை ஏற்று தூய வாழ்வு வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. கருப்பையினின்று எம்மைத் தேர்ந்தெடுத்த இறைவா, எம் பங்கிலும், ஏனைய பங்குகளிலும் பசியோடு வாழும் ஏழை எளியவர்மீதும் நோயுற்றோர்மீதும் கைவிடப்பட்டோர்மீதும் அன்னை மரியாவைப்போல நாங்களும் ஓடோடி உதவி செய்யும் நல்ல மனத்தைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கமே உருவான இறைவா, புனித யோசேப்பும் அன்னை மரியாவும் இறைத்திருவுளத்திற்கேற்ப எகிப்து நாட்டுக்குப் புலம் பெயர்ந்ததைப்போல் இன்றைய சூழ்நிலையில் அகதிகளாகப் புலம் பெயர்ந்தவர்களுடன் நீர்தாமே இருந்து, நல்ல உணவு, உறைவிடம் தந்து பாதுகாத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 09.09.2018 ஆண்டின் பொதுக்காலம் 23ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. எசா. 35: 4-7 II. யாக் 2: 1-5 மத். 7: 31-37

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்றைய தினம் திருஅவையானது ஆண்டின் பொதுக்காலம் 23ம் ஞாயிறைச் சிறப்பிக்க அழைக்கின்றது. இன்றைய வாசகங்கள் அனைத்தும் ஏற்றத்தாழ்வு பாராமல் செயல்பட அழைக்கின்றது. இறைவாக்கினர் எசாயா தன் முதல் வாசகத்தில் ஆண்டவர் நீதியும், வறண்ட நிலத்தில் பாயும் நீரோடையும் போன்று நம்மைச் சுற்றி பாதுகாப்பார் என்றுரைக்கிறது. இரண்டாம் வாசகத்தில் புனித யாக்கோபு பணக்காரன், ஏழை என்று ஆள்பார்த்து செயல்படாதீர்கள் என்று நமக்குக் கூறுகிறார். மனிதர்கள் பெரும்பாலும் ஆள்பார்த்து செயல்படுபவர்கள் (லேவி 19:15) என்றும் ஆனால் கடவுள் ஆள்பார்த்து செயல்படுகிறவர் அல்லர் (உரோ. 2:11, கலா2:11) என்றும் கூறப்படுகிறது. ஆனாலும் உலகின் பார்வையில் ஏழைகளாய் இருப்பவர்களை நம்பிக்கையில் செல்வர்களாகவும், தன்மீது அன்பு செலுத்துபவர்கள் வாக்களிக்கப்பட்ட அரசை உரிமைப்பேறாகப் பெறுபவர்களாகவும் கடவுள் தேர்ந்துக்கொண்டிருக்கிறார். நற்செய்தியாளர் மாற்கு, தன் நற்செய்தியில் பேசமுடியாத, காதுகேளாதவரை ஆண்டவர் தொட்டு குணமாக்குகிறார். நாமும் ஆள்பார்த்து செயல்படாமல் இயேசு கிறிஸ்துவின்மீதுள்ள தாகத்தை உணர்ந்து இயேசுவைப்பற்றி நாம் அறிந்ததைப் பிறருக்கு எடுத்துரைக்கும் ஆற்றல் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. மாட்சிமையின் தேவனே இறைவா, உம் பிரதிநிதியான திருத்தந்தை எமக்களிக்கும் பரிந்துரைகள், அன்பு மடல்கள் அனைத்தையும் நாங்கள் கவனமுடன் ஏற்று செயல்படுத்தவும், எம்மை வழிநடத்தும் பேராயர்கள், குருக்கள், துறவியர் அனைவருடனும் நாங்களும் ஒன்றிணைந்து அன்புறவிலும், செயல்பாட்டிலும் நல்லெண்ணம் கொண்டு வாழவும் செயல்படவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. சமத்துவம் என்ற கோட்பாட்டிற்கு வித்தான இறைவா, வசதியும், செல்வாக்கும் உள்ளவர்களுக்குத்தான் முதலிடம் என்ற தவறான எண்ணத்தை வைத்திருக்கும் உள்ளங்கள் மாறவும், அனைவரும் சமம் என்ற கருத்துக்கேற்ப பாரபட்சமின்றி செயல்படவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.





3. உண்மையின் தேவனே இறைவா, உம் இறையரசைக் கட்டியெழுப்பும் இறைமக்களின்மீது நடத்தப்படும் தீயச் சக்திகளின் தாக்குதலினால் ஏற்படும் இன்னல்களிலிருந்து அவர்களைக் காத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நீதியின் தேவனே இறைவா, தற்போதைய சூழலில் நிலவிவரும் பல வேதனைமிக்க நிகழ்வுகளை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். குறிப்பாக, ஒவ்வொரு குழந்தைகளையும் தன் குழந்தையாகப் பார்க்கும் உயரிய உள்ளத்தை மாந்தர்க்கு தந்து மனிதாபிமான மிக்க மக்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 14.09.2018 திருச்சிலுவையின் மகிமையின் விழா திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. எண். 21: 4-9 II.பிலி. 2: 6-11 யோவான் 3: 13-17

இறையேசுவில் அன்பிற்குரிய சகோதரிகளே, சகோதரர்களே, அன்னையாம் திருஅவை இன்று திருச்சிலுவையின் மகிமையைக் கொண்டாடி மகிழ்கின்றது. சிலுவை என்பது நமது மீட்பின் சின்னம். கடவுளின் உச்சக்கட்ட அன்பின் அடையாளம். ஆனால் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிலுவை என்றால் அது அவமானத்தின் சின்னம். ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்குப்பின் கான்ஸ்டான்டைன் என்ற அரசன் தன்னை கிறிஸ்தவராக அறிவித்தார். அதன் பின்பு சிலுவை கிறிஸ்தவர்களின் அடையாளமாகக் கருதப்பட்டது. அவர் திருச்சிலுவையின் மகிமையை அறிந்து போருக்குச்செல்வதற்கு முந்திய நாள் கனவில் இந்த சிலுவை அடையாளத்தையும் அதன்கீழ் இந்த சிலுவை அடையாளத்தினால் வெற்றி பெறுவாய் என்று எழுதியிருந்ததையும் கண்டார். உடனே மறுநாள் போருக்குச் செல்லுமுன் கொடிகளில் சிலுவை அடையாளம் வரைந்து சென்றார். மிகுந்த வெற்றியோடு திரும்பினார். இவருடைய அன்னை கெலன் கல்வாரி மலையில் இயேசுவின் சிலுவையைக் கண்டெடுத்தார்.

கி.பி. 614ம் ஆண்டு பாரசீக மன்னன் 2ம் கோஸ்மாஸ் படையெடுத்து வர இந்தச் சிலுவை மீண்டும் அரசர் கைவசம் வந்தது. அரசர் எருசலேமுக்குப் பயபக்தியுடன் தோளில் சிலுவையை சுமந்து வந்தார். கல்வாரி மலையில் அவரால் நுழைய முடியவில்லை. அரச ஆபரணங்களுடன் சுமந்து வந்ததைப் பார்த்த எருசலேம் ஆயர் அரச ஆடைகளைக் களைந்து தவ உடைகளைத் தரித்து வரச்சொன்னபோது அவரால் கல்வாரி மலைக்கு வர முடிந்தது. திருக்கல்லறையில் திருச்சிலுவையை அரசர் வைத்தார். அன்று முதல் திருச்சிலுவை "மகிமை" என்ற விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. அவமானத்தின் சின்னமான சிலுவை மீட்பின் சின்னமாக வான் வீட்டின் வழிகாட்டியாகத் திகழ்கிறது. நம் அன்றாட வாழ்வில் வரும் சிறுசிறு துன்பம் என்னும் சிலுவையை இயேசுவுக்காக ஏற்று அவர் வழியில் நடக்க இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அவமானத்தின் சின்னமான சிலுவையை மீட்பின் சின்னமாக்கிய இறைவா, எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தங்கள் வாழ்வில் ஏற்படும் துன்பங்களைக் கண்டு துவண்டுவிடாமல், சிலுவையைச் சுமந்தவர்களாக உம்மைப்பின்பற்ற வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. சிலுவையின் மூலம் சிகரத்தைத் தொட்ட இறைவா, எம்மை வழிநடத்தும் எம் நாட்டுத் தலைவர்கள் அனைவரும் தங்களுக்குள் நல்லுறவு கொண்டு வாழவும், எங்களை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் கருவிகளாக இயங்கவும் ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்த இயேசுவே, எம் இளைஞர்கள் தங்களது பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெரியவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய அருளைத்தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொண்ட மக்களாகிய நாங்கள் அனைவரும், திருச்சிலுவையின் மகிமையை அறிந்து, உணர்ந்து வாழ்வின் சிலுவைகளை ஏற்று வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 15.09.2018 அன்னை மரியாளின் ஏழு துயரங்கள் (வியாகுலங்களின் ) விழா

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

1. சிமியோனின் தீர்க்கத்தரிசனம் (லூக் 2:25-35)
2. எகிப்துக்கு தப்பிச் செல்லுதல் (மத் 2:13-15)
3. கோயிலில் சிறுவன் இயேசு காணாமல் போனது (லூக் 2:41-50)
4. கல்வாரி நோக்கி சிலுவை சுமந்து செல்லும் இயேசுவை சந்தித்தல் (யோ 19:17)
5. தம் மகன் சிலுவையில் அறையப்பட்டு உயிர்விடுதல் (யோ 19:25-30)
6. தம் மகனின் உயிரற்ற உடலை தம் மடியில் தாங்கியது (லூக் 23:50-54)
7. தம் மகனின் நல்லடக்கம் (லூக் 23:50-56)

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று திருஅவை அன்னை மரியாளின் ஏழு வியாகுலங்களைப் பற்றி நினைவுகூற அழைக்கின்றது. அன்னையின் வியாகுலங்கள் தன் மகன் இயேசுவின் மீட்பு பணியில் பின்னிப்பினைந்து, அதன் வாயிலாக கிறித்துவ வாழ்வின் வேர்களாக உள்ளதை யாரும் மறுக்க இயலாது. இவ்விழா ஜெர்மனி மற்றும் போர்த்துகல் நாட்டில் தொடக்க காலங்களில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.போர்த்துகல்நாட்டுமறைப்பணியாளர்கள்தமிழ்நாட்டில் "பத்ரோவாதோ மறைப்பணியாளர்கள்" என்று அழைக்கப்பட்டவர்களாக





பல இடங்களில் வியாகுல அன்னையின் ஆலயங்களை எழுப்பி அதன் பக்தி முயற்சிகளை வளர்த்தனர். திருத்தந்தை 13ம் பெனடிக்ட் 1721ம் ஆண்டு இவ்விழாவை உலகலாவிய திருஅவையும் கொண்டாட வழிவகை செய்து, அதற்கு "மரியாளின் ஏழு வியாகுலங்களின் விழா" என்றழைத்தார். தொடக்க காலத்தில் இவ்விழா குருத்து ஞாயிறுக்கு முந்தைய வெள்ளியன்று நினைவுகூறப்பட்டது. ஏனெனில் மரியாளின் துயரங்கள் கன்னிமரியாளிடம் பிறந்த கிறிஸ்துவின் பாடுகளோடு கொண்டிருந்த நெருங்கிய தொடர்பே இதற்கு காரணம். பின்னர் திருத்தந்தை 10ம் பயஸ் இத்திருவிழாவை செப்டம்பர் 15ம் நாள் கொண்டாடும்படி செய்தார். இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட நாளும் மிகவும் பொருத்தமாய் அமைந்தது. காரணம் செப்டம்பர் 15 அன்று கொண்டாடப்படும் இவ்விழாவானது, மரியாளின் பிறப்பு விழாவிலிருந்து (செப்.8) எட்டு நாட்களுக்குப்பிறகு என்றும், திருச்சிலுவை விழா கொண்டாடப்பட்ட நாளுக்கு (செப்.14) மறுநாள் என்கிற விதத்திலும் அமைந்துள்ளது. இதனால் மரியாளின் துயரத்திற்கும் இயேசுவின் பாடுகளுக்கும் இடையே உள்ள தொடர்பும் நிலைநாட்டப்பட்டுள்ளது.

அன்னை மரியாளின் வாழ்வில் அவள் அடைந்த துயரங்கள், அவளது நம்பிக்கைக்கு தடைக்கல்லாக அமையவில்லை. மாறாக தனது துயரங்களை தனது நம்பிக்கையின் படிக்கல்லாக அமைத்துக்கொண்டாள். அவள் சந்தித்த துயரங்களுக்கு ஏற்ப அவளது நம்பிக்கை உறுதியாக மாறியது. அதுபோல நம் துயரங்களும் நம் நம்பிக்கையை வளர்த்தெடுப்பதாக அமைய இத்திருப்பலியில் மன்றாடுவோம். மற்றவர்களின் வேதனையில் பங்கெடுப்பதும் பகிர்ந்து கொள்வதும் கிறித்துவ வாழ்வின் கடமைகளுள் ஒன்று என்பதை அன்னை மரியாளின் வாழ்வு நமக்கு எடுத்தியம்புகிறது. வேதனைப்படுகிறவர்களோடு, இன்னல் படுகிற மக்களோடு, நம்மை இணைத்துக் கொள்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, திருஅவையின் பொறுப்பாளர்களான திருத்தந்தை, பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் தங்களின் துயரங்களை அன்னையைப்போல் ஏற்று ஆற்றலும் உறுதியும் பெற்று தொடர்ந்து பணிபுரிய நீர் ஆசீர்வதிக்க வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.
2. உம் அன்னையைத் தாரை வார்த்த இறைவா, இவ்வுலகில் பெண்கள் சிசுவாக, சிறுமியாக, இளம் பெண்ணாக, மகளாக, சகோதரியாக, தாயாக வாழும் சூழலில் பற்பல துன்பங்களைச் சுமக்கிறார் என்பதனைக் குடும்பத்திலும், சமூகத்திலும், திருஅவையிலும் உள்ளவர்கள் உணர்ந்து இறை ஒளியில் அவர்களுக்குத் துணையாக, ஆறுதலாக, தேறுதலாக இருக்கும் வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்னையின் மேன்மையை உணர்த்திய இறைவா, இன்று காலச் சூழலால் பிள்ளைகள் தாயை பராமரிக்க இயலா நிலையால் முதியோர் இல்லங்கள் பெருகி வருகிறது. இந்நிலை மாறி அனைவரும் ஒரே குடும்பமாக வாழ அருள்புரிய உம்மை மன்றாடுகிறோம்.
4. திருஅவைக்குத் தலைவரே, வியாகுல அன்னையைப் போற்றிப் புகழ்ந்து துன்பங்களைத் தாங்கி வாழ்ந்து உமது பிள்ளைகளாக அன்னையின் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 16.09.2018 ஆண்டின் பொதுக்காலம் 24ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

I. எசா. 50: 5-9 II. யாக். 2: 14-18 மாற்கு 8: 27-35

இன்றைய நற்செய்தியில் இயேசு தன்னைச் சீடர்கள் எப்படி புரிந்திருக்கிறார்கள் என்பதை அறிந்துக்கொள்ள, "மக்கள் என்னை யார் என்று நினைக்கிறார்கள்?" என்ற கேள்வியைக் கேட்கின்றார். இது ஒரு மேலெழுந்த வாரியான கேள்வியன்று. மாறாக, தன்னோடு நெருங்கி வாழ்ந்த சீடர்களின் மன உணர்வை அறிந்துக்கொள்ள இயேசு எழுப்பிய கேள்வி. இதேக் கேள்வியை இன்று நம் ஒவ்வொருவரையும் பார்த்து கேட்கிறார். நம் பதில் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க இன்றைய வாசகங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. இன்றைய நற்செய்தியில் நான் யார் என்று இயேசு கேட்ட கேள்விக்கு, பேதுரு நீரே மெசியா என்று பதில் கூறினார். மெசியா என்றால் யார்? என்ற கேள்விக்கு விடைத்தருகிறது முதல் வாசகம். மெசியா என்பவர் மக்களைத் துன்பத்திலிருந்து மீட்டு எல்லாத் துன்பங்களையும் சுமந்துக்கொள்பவர் என்பதை விளக்குகிறது. ஆனால் அந்த மெசியாவைப் பின்செல்ல விரும்பும் நாம் எவ்வாறு நமது வாழ்வை வாழவேண்டும் என்பதை, "என்னைப்பின் செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்து தன் சிலுவையைச் சுமக்க வேண்டும்" என்கிறார். "தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவார். என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக்கொள்வர்" என நமக்கு அறிவுறுத்துகிறார்.

தன்னைப்பற்றி முழுமையாக அறிய வேண்டும் என முயற்சிக்கிறவன் மனிதன். தன்னைப்பற்றி அடுத்தவர்களும் முழுமையாக அறிய வேண்டும் என்று முயற்சிக்கிறவன் புனிதன். நமது வாழ்வில் சுமைகளைச் சுமந்தும் பகிர்ந்தும் வாழும்போது இறைவன்மேல் உள்ள நம்பிக்கை செயலாக்கம் பெறச் செய்கிறோம் என்ற கருத்தைத்தான் இன்றைய 2ம் வாசகம் வலியுறுத்துகிறது. மற்றவர்களின் துன்பத்திலும் சோர்விலும் நாம் பங்கெடுக்கும்போது அங்கே இறைவனின் செயல்பாடுகளைக் காணலாம். துன்பங்களை நம் வாழ்வில் சந்தித்துத்தான் ஆகவேண்டும். இதற்கு விதிவிலக்குக் கிடையாது. துன்பங்களைக் கண்டு துவண்டு விடாமல், துன்பங்கள் வழியாக வெற்றியைக் கொடுத்த வெற்றி நாயகன் இயேசு நம்மோடு இருக்கும்போது, எதைக்கண்டும் அஞ்ச வேண்டியதில்லை





என்ற உறுதியுடன் இத்திருப்பலியில் பங்கேற்று நம்பிக்கையுடன் செயலாற்றுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, உம்மால் திருப்பொழிவு செய்யப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் வழிதவறியவர்களுக்கு நல் வழிகாட்டியாகவும் அன்பில் நிலைத்து சமாதான கருவிகளாய் வாழ்ந்து திருஅவையை நல்முறையில் வழிநடத்த அருள்புரியும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. நாட்டையாளும் தலைவர்கள், தங்களின் சுயநலனுக்காக வாழாமல், மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டோம் என்பதை உணர்ந்துமக்களின் நலனில் அக்கறைக்கொண்டு செயல்படவும், தன் பணியை நீதியோடும், நேர்மையோடும் செயலாற்ற வேண்டிய நல்லுள்ளத்தை அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கத்தின் இறைவா, எம் பங்கில் வாழ்கின்ற ஏழைகள், அனாதைகள், நோயாளிகள், ஒதுக்கப்பட்டோர் இவர்களுக்கு உமது இரக்கத்தை வெளிப்படுத்தும் கருவிகளாக எம்மை மாற்றி அவர்களுக்கு ஆறுதலாக இருந்து வழிநடத்தத் தேவையான ஆற்றலை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.
4. என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வர் என்ற இயேசுவே, நாங்களும் எங்கள் வாழ்வின் துன்பச் சிலுவையைச் சுமந்துக்கொண்டு, உமது நற்செய்தியின்படி வாழ்ந்து நல்வழிகாட்டியாக செயல்பட உமதருளைப் பொழிந்திட உம்மை மன்றாடுகிறோம்.

## 17.09.2018 புனித இராபர்ட் பெல்லார்மின் திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இறை இயேசுவின் இனிய மக்களே, புனித இராபர்ட் பெல்லார்மின் இத்தாலி நாட்டில் உயர்குடியில் தோன்றியவர். இவர் தமது 18வது வயதில் இயேசு சபையில் சேர்ந்தார். கி.பி. 1569ம் ஆண்டு பெல்ஜியம் நாட்டிலுள்ள லுவேய்ன் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கே திருமறைக்கு மாறான கருத்துகள் வேகமாகப் பரவிவந்த காரணத்தால், அவற்றை எதிர்த்து தமது சொல்லாற்றலாலும் அறிவுக் கூர்மையாலும் தக்க பதிலளித்தார். இதில் நல்ல அனுபவம் அடையவே மீண்டும் உரோமைக்கு அழைத்துக் கொள்ளப்பட்டார். அங்கே, ஜெர்மனியிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும் வந்திருந்த குரு மாணவர்களுக்கு திருஅவைக்கு எதிரான கருத்துக்களை (பதிதத்தை) முறியடிப்பதற்கான வழிமுறைகளைக் கற்றுக் கொடுத்தார். இவைகள் மட்டுமல்லாமல் மறைவிளக்க நூலையும் வெளியிட்டார். அது இன்றைக்கு 60மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இயேசு சபையில் இவருக்குப் பல உயர்ந்த பதவிகள் கொடுக்கப்பட்டன.

திருத்தந்தை 8வது கிளமென்ட் இவரின் தொண்டுகளைப் பாராட்டி கர்தினால் பட்டமளித்தார். 11வது சிங்கராயர் இவரை உரோமைக்கு அழைத்துச் சிறப்பு ஆலோசகராக அமர்த்திக் கொண்டார். இவர் புனித கொன்சாகா ஞானப்பிரகாசியரது ஆன்ம குருவாக இருந்தார். இவர் மற்ற துறவிகளிடத்திலும் அன்பு, கீழ்ப்படிதல், தாழ்ச்சி போன்ற நற்பண்புகளைக் கடைப்பிடித்தார். இவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட திருஅவையை அன்புடன் பராமரித்தார். திருஅவையின் மேன்மைக்காக அயராது உழைத்த புனித பெல்லார்மினைப் போல நாமும் நம்மால் இயன்றவரை திருஅவைக்காகவும், திருஅவையை வழிநடத்துபவர்களுடனும் சேர்ந்து உழைக்கும் ஆர்வத்தை இறைவன் நமக்குத் தந்திட இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரும் நல்ல ஆன்ம சுகம் பெறவும், இன்றைய காலக்கட்டத்தில் இவர்களுக்கு ஏற்படும் எதிர்ப்புகள், பிரச்சனைகள், மனவுலைச்சல்கள் போன்றவைகளை எதிர்க்கொள்ளும் திறமையும், ஆற்றலையும், தூய ஆவியின் அருள்வரங்களால் ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் இறைவா, நற்செய்தியை அறிவிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் எதிர்வரும் சவால்களை தூயஆவியாரின் துணைக்கொண்டு முறியடித்து புனித இராபர்ட் பெல்லார்மினைப்போன்று நற்செய்தி பணிபுரிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. ஞானத்தின் ஊற்றே இறைவா, திருஅவையின் கொள்கைகளுக்கும், கட்டளைகளுக்கும் எதிர்மறையாகப் பேசுபவர்களை நம் புனிதரைப்போல விவேகத்துடனும், ஆற்றலுடனும் எதிர்த்து நாங்கள் உண்மைக்குச் சாட்சிகளாக விளங்கும் வரத்தைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 21.09.2018 தூய மத்தேயு விழா — திருப்பலி

**முன்னுரை** — திருமதி. ராணிசம்பந்தன்

இறையன்பில் இணைந்துள்ள இனிய சமூகமே, நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியாளர் தூய மத்தேயுவின் விழாவினை இன்று சிறப்பு செய்வோம். மத்தேயு என்ற சொல்லுக்கு யாவேயின் அருட்கொடை என்பது பொருள். மத்தேயு நற்செய்தியானது பாலஸ்தீன நாட்டில் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய யூதர்களுக்கு எழுதப்பட்டது. மனம் திரும்பிய இஸ்ரயேல் வழியாக இறையரசுத் திட்டம் நிறைவுறுகிறது என்பதே இதன் சாரம். வரி வசூலிப்பது பாவம் என்று கருதும் சமூகச் சூழ்நிலையில் அவரைத் தேர்ந்தெடுத்து முன்னிலைப்படுத்துகிறார் இயேசு.





வரிதண்டுபவருடன் சேர்ந்து உணவருந்துகிறார். இதைக்கண்ட பரிசேயர் இதுபற்றி சீடர்களிடம் கேட்டபோது இயேசுவே இதற்குப் பதிலளிக்கிறார். "நோயற்றவர்க்கு அன்று, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. பலியை அன்று, இரக்கத்தையே விரும்புகிறேன், பாவிகளையே அழைக்க வந்தேன்" என்று பதிலளிக்கிறார். ஆண்டவரின் அழைப்பை ஏற்றுக்கொண்ட மத்தேயு, அழைப்பிற்குத் தகுந்த வாழ்க்கையை வாழ்ந்தார். நற்செய்தியை வார்த்தையாலும், எழுத்தாலும் அறிவித்தார். நற்செய்தி அறிவிப்பது நம்மேல் சுமத்தப்பட்டக் கடமை என்பதை உணர்ந்து செயல்படுவோம். இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து உடனே அவருடன் இணைந்து நற்செயல் புரிந்து இறைவனுக்கு உகந்தவர்களாக வாழ புனித மத்தேயுவின் வாழ்க்கை நமக்கு அழைப்பு விடுக்கிறது. இவரைப்போன்று இயேசுவுக்குச் சான்று பகர அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, நற்செய்தி அறிவிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் வாழ்வில் வரும் சவால்களைத் தூய ஆவியின் துணையினால் வெற்றிக்கொண்டு தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களைப் பாதுகாத்து அருள்வழியில் நடத்திட உம் வல்லமையை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. "நம்பிக்கையின் நாயகனே இறைவா, அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு" என்ற கருத்திற்கேற்ப இக்காலச் சூழலில் குடும்பங்களில் நல்ல குருவானவர்களை உருவாக்க தங்கள் பிள்ளைகளை அர்ப்பணிக்கக் கூடிய பெற்றோர்களை நீர் ஆசீர்வதிக்கும்படியும் இளம் பிள்ளைகளுக்கு இறையழைத்தல் பணிபுரியும் ஆர்வத்தை அளித்திடும்படி உம்மை மன்றாடுகிறோம்.
3. அமைதியின் இறைவா, விபத்துகளும், தற்கொலைகளும், அநியாயமான கொலைகளும் பெருகிவரும் இவ்வுலகில் அமைதி உரித்தாகுக என்று உம் சீடர்களுக்கு உரைத்தபடி உம்முடைய அமைதியை எல்லா மக்களுக்கும் வழங்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
4. பாவிகள் மனந்திரும்பவும், பாவங்கள் இவ்வுலகில் குறைந்திடவும், ஒருவரையொருவர் அன்பு செய்து ஒற்றுமையோடு வாழ வழி செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 22.09.2018 அருளாளர் ஜோசப் கலசான்ஸ் — திருப்பலி

**முன்னுரை** — திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் ஸ்பானிஸ் நாட்டு சலேசிய குடும்பத்தைச் சார்ந்த அருளாளர் ஜோசப் கலாசன்ஸ் மற்றும் அவரோடு 93க்கும் அதிகமான மறைசாட்சிகளின் நினைவினைக் கொண்டாடுகின்றோம். ஸ்பெயின் நாட்டுப் போரில், இறைப் பணியாற்றியதற்காக கிறித்துவத் துறவிகள், குருக்களைச் சிறையில்

அடைத்துக் கொலைச் செய்தார்கள். அத்தகையோரில் 95 சலேசியத் துறவிகள், 39 குருக்கள், 22 திருப்பணியாளர்கள், 24 அருட்சகோதரர்கள், 2 சலேசிய கன்னியர்கள், 4 சலேசிய உடனுழைப்பாளர்கள் அடங்குவர். அனைவரும் ஏறக்குறைய ஜூலை 1936 முதல் ஏப்ரல் 1938 வரையிலான காலக்கட்டத்தில் கிறிஸ்துவின் மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையின் பேரிலும் இறைப்பணிச் செய்ததன் மூலமாகவும் தங்களது இன்னுயிரை கிறிஸ்துவுக்காக இழந்தார்கள்.

சலேசிய அழைப்பின் முன்மாதிரியாகவும், கடவுளிடம் கொண்ட முழு நம்பிக்கையினால் கொலைக்காரர்களை மன்னித்தலில் முன்னோடிகளாகவும் திகழ்ந்தார்கள். இத்தியாகப் பலியில் பங்கெடுக்க வந்துள்ள நாமனைவரும், நம் ஒவ்வொருவருக்காகவும், சலேசியர்களுக்காகவும் சிறப்பான விதத்திலே செபிக்கக் கடமைப் பட்டுள்ளோம். தொன் போஸ்கோவைப் போல, தொன் போஸ்கோவாக வாழ்ந்த இந்த சலேசிய மறைசாட்சிகளின் முன்மாதிரியினைப் பின்பற்றி வாழ்வதற்குத் தேவையான வரத்திற்காகத் தொடர்ந்து நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, திருஅவையின் தலைவர்களும் உம் பணியைச் செய்கின்றவர்களும் உம் பாதச்சுவடுகளைப் பின்பற்றி உம்மைத் தங்கள் வாழ்வில் பிரதிபலித்து, தங்கள் அழைத்தலில் நிலைத்து வாழ வரம் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அமைதியின் தெய்வமே இறைவா, எம் பாரத நாட்டிலே, சண்டைச் சச்சரவுகள் நீங்கி அமைதி நிலவவும், நாட்டையாளும் தலைவர்கள் உண்மையுள்ளவர்களாய், மக்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கவும் வேண்டிய நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அருளின் ஊற்றே இறைவா, சலேசியச் சபையின் வழியாக இளையோருக்காகப் பணிபுரியும் அனைத்து சலேசியக் குடும்ப அங்கத்தினர்களும், உலகிற்கு ஒளியாகவும் உப்பாகவும் இருந்து தாங்கள் வழிநடத்தும் இளையோரை அன்பிலும், உண்மையிலும், நீதியிலும் பயிற்றுவித்து, உமக்கேற்ற சாட்சிகளாக அவர்களை உருவாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 23.09.2018 ஆண்டின் பொதுக்காலம் 25ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. சா.ஞா. 2: 17-20 II. யாக். 3: 16-4:3 மாற்கு 9:30-37

இறையேசுவில் இனியோரே, ஆண்டவர்மீது அச்சம் கொள்வதும் அவரது திருச்சட்டத்தின்படி நடப்பதுமே உண்மையான உயரிய ஞானம். ஆனால் யூதர்களில் சிலர் கிரேக்க மொழி, மெய்யியல், பண்பாடு, வழிபாட்டு முறை முதலியவற்றின்மீது அளவற்ற நாட்டம் கொண்டிருந்தனர். இத்தகு மக்களை மனம்மாற இன்றைய முதல் வாசகம் அழைப்பு விடுக்கிறது.





இரண்டாம் வாசகத்தில் உண்மையான கிறிஸ்துவன் பொறாமையையும், போராட்டத்தையும் விலக்கி, சமாதானத்தின் தூதுவராய் விளங்க வேண்டும் என்றும், செபிக்கும் முறை அறிந்து செபிக்க வேண்டுமென்றும், நாம் கேட்பது கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இருக்க வேண்டுமென்றும் இன்றைய வாசகம் நமக்கு அறிவுறுத்துகிறது. கட்டுக் கடங்காத ஆசையே அனைத்து தீமைகளின் ஆணிவேர், ஆசைகள் நிறைவேறாதபோது சண்டைச் சச்சரவுகள் ஏற்படுகின்றன. கீழ்த்தர ஆசைகளால் தூண்டப்பட்டு, சுயநல ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்கு இறைவன் என்றுமே துணை நிற்கமாட்டார் என்பதையும் இரண்டாம் வாசகம் நமக்கு எடுத்துரைக்கிறது. இன்றைய நற்செய்தியில் இறையரசைப் பற்றி இயேசு கூறுவதைக் கேட்ட சீடர்கள், அந்த இறையரசில் யார் பெரியவர் எனத் தெரிந்துக் கொள்ள ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் இயேசுவோ கல்லம் கபடமற்ற சிறுகுழந்தையை அவர்களுக்கு எடுத்துக் காட்டாய்க் கூறுகிறார். நான் மற்ற மனிதரைவிட பெரியவனாக இருக்க வேண்டும் என்ற போட்டி மனப்பான்மை இன்றும் அனைவரையும் ஆட்டிப் படைக்கின்றது. வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளில், நீயா, நானா? யார் பெரியவன் என்ற போட்டியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இயேசு அன்புடனும், பொறுமையுடனும், நம்பிக்கையுடனும் எளிமையே உருவான குழந்தைகளின்மூலம் அறிவுறுத்துகிறார். "குழந்தையாய் மாறாவிடில் விண்ணரசில் நுழைய மாட்டீர்கள்" என்றும் "முதல்வராக இருக்க விரும்புகிறவன் பணியாளனாக இருக்கட்டும்" என்றும் கூறிய இயேசுவின் வார்த்தைகளை நம்முடைய மனதில் அழமாக நிலைநிறுத்தி இறையரசை அடையும் அருளைப்பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, எங்கள் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் இயேசுவின் இறையரசை இறுதிவரை பறைசாற்றும் மனஉறுதியும் இறையருளும் பெற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. ஞானத்தின் இருப்பிடமே இறைவா, இறைஞானமே அனைத்திற்கும் முதன்மையானது இறைஞானமே பாவச்செயல்களிலிருந்து அனைவரையும் மீட்கும் என்ற உண்மையை நாங்கள் உணர்ந்து இறைப்பற்றும், இறையச்சமும் உள்ளவர்களாக வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கத்தின் ஊற்றே இறைவா, பிறந்த அனைவரும் இறப்பர். நாமும் ஒருநாள் இறப்போம் என்பதை மனதில் கொண்டு புனித வாழ்வு வாழவும், எளியமனதும் அன்புள்ளமும் கொண்டு வாழவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. சமாதானத்தின் இருப்பிடமே இறைவா, உங்களுக்குச் சமாதானம் என்று கூறிய இயேசுவின் வார்த்தையை வாழ்வாக்க, சமாதானத்தின் தூதுவர்களாய் நாங்கள் வாழும் மனநிலையை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 27.09.2018 புனித வின்சென்ட் தே பவுல் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

அன்புள்ளோர் அனைவருக்கும் விழா வாழ்த்துகள் கூறி இறைவனைப்போல் எளிய, ஏழ்மை நிலை ஏற்று "எல்லோருக்கும் எல்லாமாக" வாழ இணைந்து வந்துள்ள அனைவரையும் வரவேற்கின்றோம். அன்றிலிருந்து இன்றுவரை அனைவரின் இதயத்திலும் நீங்காது நிறைந்து இருக்கும் புனிதர் இவர். பிரான்சிஸ் கேஸ்கனி என்ற நகரில் பிறந்த இவர் குருத்துவப் படிப்பிற்கு பின் பாரிசில் பங்குத் தந்தையாகப் பணிபுரிந்தார். தந்தை ஜீன் என்பவரின் தோழமையினால் இவரது ஆன்மீகம் ஆழமடைந்து, 40 வயதில் முற்றிலும் இறைவனுடன் ஒன்றியவராக வாழ்ந்தார். எங்கெல்லாம் இவரது தியாகத்தொண்டு தேவைப்பட்டதோ அங்கெல்லாம் முழுமையாய் தன்னை அர்ப்பணித்தார்.

இவரது சபைத் துறவிகள் ஏழைகள், ஆதரவற்றோருக்காகவே தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென சபை ஒழுங்குகளை அமைத்தார். இவரது வியத்தகு பணியைப் பார்த்து லூயி த மரியாக் என்பவர் பொருளுதவி செய்தார். அதனைக் கொண்டு பெண்களுக்கென ஒரு சபையைத் தோற்றுவித்தார். அவர்கள் "பிறரன்புச் சகோதரிகள்" என அழைக்கப்பட்டனர். இவற்றோடு நின்று விடாமல் மூன்றாம் சபை ஒன்றையும் உருவாக்கி மக்களை இணைத்து இரங்கும் உள்ளம் கொண்டு வாழ அழைத்தார். சீரிய நோக்கோடு இன்றும் இப்பணித் தொடர்கின்றது. "திருஅவையில் உள்ள கொடையளிக்கும் எல்லா நிறுவனங்களுக்கும் இவரே பாதுகாவலர்" என திருத்தந்தை 13ம் சிங்கராயர் அறிவித்தார். இப்புனிதரைப்போல நம்பிக்கைப் பார்வையில் ஏழைகளைப் பார்க்கும்போது இறைவனின் வடிவத்தைப் பார்ப்போம். இறைமகனின் மனப்பான்மையோடு ஏழைகளை அன்பு செய்து இரக்கச் செயல்கள் பல புரிவோம். அதற்கான மனத்திடனை இறைவன் நமக்களிக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. பணிபெற அன்று, பணிபுரியவே வந்தேன் என்றுரைத்த இறைவா, எங்கள் திருத்தந்தைக்காக மன்றாடுகிறோம். அவர் புனித வின்சென்ட் தே பவுலின் மறுவடிவமாக இறைவனின் அரசு எளியவர்களின் அரசு, அது அமைந்திட வேண்டும் என அன்றாடம் உழைக்கும் அவரை உமது திருக்கரத்தால் தாங்கி வழிநடத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கம் நிறைந்த இறைவா, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார், நற்செய்தி மற்றும் இறைவாக்குப் பணியாளர்கள் அனைவரும் புனித வின்சென்ட் தே பவுல் போல ஏழைகளுக்கு அன்பும், ஆதரவற்றோருக்கு அடைக்கலமும் தந்து இறைத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அருளாசீரை வழங்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. எம்மை உருவாக்கிய இறைவா, புனித வின்சென்ட் தே பவுல் சபை இயக்கமானது எந்த குறிக்கோளுக்காக உருவானதோ அதற்காகவே இயங்கவும், அதற்காக உழைக்கும் அனைத்து நல்லுள்ளங்கள், பொருள் உதவி செய்வோர், உடல் உழைப்பைத் தருவோர் அனைவரும் ஒற்றுமையாக மகிழ்ச்சியாக ஆரோக்கியமாக வாழவும் தொடர்ந்து பணிபுரிய நீர் ஆசீர்வதித்து காத்திடவும் வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.





## 29.09.2018 புனித மிக்கேல், கபிரியேல், இரபேல் அதிதூதர்கள் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவில் நம்பிக்கை மிக்கவர்களே, இன்றைய தினம் நமது திருஅவை அதிதூதர்களின் திருநாளைச் சிறப்பிக்க அழைக்கிறது. "மிக்கேல் என்றால், இறைவனுக்கு இணையானவர் என்பது பொருள். விண்ணுலகில் ஏற்பட்ட போரில் சாத்தனையும், அதன் சாகசங்களையும் முறியடித்து நரகத்தில் தள்ளியதில் தந்தையான கடவுளோடு உடனிருந்தவர் வானதூதர் புனித மிக்கேல். திருத்தந்தை 13ம் சிங்கராயர் ஒரு சமயம் மயக்கமடைந்த வேளையில் காட்சி ஒன்றைக் கண்டார். அந்தக்காட்சியில் திருஅவை அழிந்துவிடக் கூடிய பேராபத்து இருந்தது. புனித மிக்கேல் தூதர் தன் வானதூதர்களுடன் தோன்றி திருஅவையைப் பாதுகாத்த நிகழ்வைக் கண்டு அதை மற்றவர்களுக்கும் கூறி உடனடியாக "அதி தூதரான புனித மிக்கேலே" என்ற செபத்தைச் செபிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

கபிரியேல் என்றால் "இறைவனின் பலம்" என்பது பொருள். இறைவனின் வல்லமையை வெளிப்படுத்தும் எல்லாச் செயல்களிலும் இவர் இருந்திருக்கிறார். இயேசுவின் பிறப்பை அன்னை மரியாளிடம் அறிவித்தவரும், பிறந்தபின் இடையர்களுக்கு அறிவித்தவரும், இயேசுவுக்கு ஒலிவ மரத்தோப்பில் தேற்றியவரும் இவரே. இறைவாக்கினர் தானியேலுக்குக் காட்சிக்கொடுத்தவரும் இவரே. "ரபேல் என்ற சொல்லுக்கு இறைவன் குணமாக்கினார்" என்பது பொருள். தொபியாசுக்கு உதவி செய்து, கண் பார்வை வரச் செய்தவரும் அவருக்கு வரவேண்டிய தொகையைப் பெற்றுக் கொடுத்தவரும், மீனின் வாயிலிருந்து இளைஞனைக் காத்தவரும் இறைவனின் முன் நிற்கும் 7 தூதர்களில் நான் ஒருவன். என் பெயர் ரபேல் என்று அறிவித்தவரும் இவரே. நமது திருஅவையைப் பாதுகாக்கவும் சாத்தானோடு நடக்கும் போரில் நாம் வெற்றி பெறவும், இத்தூதர்களின் துணையை நாடுவோம். அதிதூதரான புனித மிக்கேலே, கபிரியேலே, ரபேலே சாத்தானை வெல்ல உம் உதவியைத் தாரும் என்று இத்திருப்பலியில் செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. பாதுகாவலுக்கு வித்திட்ட எம் இறைவா, உம் வழிவாழும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் யாவருக்கும் நல்லொழுக்கத்தோடும், கன்னியத்தோடும், அன்புறவோடும் திருஅவையைப் பாதுகாத்து

வழிநடத்திச் செல்ல அருள்புரிய வேண்டுமென்று புனித மிக்கேல், கபிரியேல், இரபேல் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. உறுதியூட்டும் இறைவா, தற்போதைய சூழலில் உம்வழி வரும் மக்கள் யாவரும் எவ்வித அச்சத்திற்கும் ஆளாகாமல், பயமுறுத்தல்களுக்குப் பணியாமல், செம்மையாக அவரவர் பணிசெய்து சாத்தானின் தீயச் செயல்களால் பாதிக்கப்படாமல் இருக்க அருள்புரிய அதிதூதர்களான புனித மிக்கேல், கபிரியேல், இரபேல் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. வாழ்வாதாரமே இறைவா, எம் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கக்கூடிய எந்த தீய சக்தியாக இருந்தாலும் அதை முறியடித்து நாடும் நாட்டு மக்கள் வளமோடு வாழ வரமருள புனித மிக்கேல், கபிரியேல், இரபேல் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 30.09.2018 ஆண்டின் பொதுக்காலம் 26ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. எண். 11: 25-29 II. யாக். 5: 1-6 மாற்கு 9: 38-48

இறையேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே, இன்று அன்னையாம் திருஅவை பொதுக்காலம் 26ம் ஞாயிறு திருப்பலிக்கு நம் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் எல்தாதும், மேதாதும் இறை ஆவியைப்பெற்று இறைவாக்கு உரைக்கின்றனர். அதைப் பொறுத்துக் கொள்ளாமல் அதனைத் தடுத்து நிறுத்தும்படி மோசேயிடம் கூறுகின்றனர். இவ்வாறாக, அன்றைய மக்கள் மற்றவர்களை ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் ஒரு குறுகிய வட்டத்திலே வாழ்கின்றார்கள். இதேப்போல் இன்றைய நற்செய்தியில் சீடர் அல்லாத ஒருவர் இயேசுவின் பெயரால் பேய் ஓட்டுவதை கண்டு இயேசுவின் சீடர்கள் அவனைத் தடுக்க முற்படுகின்றனர். காரணம் தங்களுக்கு மட்டும்தான் பேய்களை ஓட்டும் அதிகாரத்தை இயேசு கொடுத்திருக்கிறார் என்று மற்றவர்களை ஏற்றுக்கொள்ளாமல் குறுகிய வட்டத்தில் சீடர்கள் வாழ்கிறார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து சீடரல்லாத ஒருவர் தன்னுடைய பெயரால் பேய் ஓட்டுவதைக் கண்டு தடுத்து நிறுத்தவில்லை. மாறாக, எனக்கு எதிராக இராதவர் என் சார்பாக இருக்கின்றார், என்று கூறி பெருந்தன்மையோடு அவனை ஏற்றுக்கொள்கிறார். நாமும் நம்முடைய வாழ்க்கையில் என்னுடைய மதம், என்னுடைய ஜாதி, என்னுடைய குடும்பம் என்று ஒரு குறுகிய வட்டத்திற்குள் நம்மை அடைத்துக்கொள்ளாமல் அதைவிட்டு வெளியில் வந்து பல நல்ல காரியங்கள் செய்யும் பிறமத சகோதரர்களையும் ஏற்றுக்கொண்டு வாழ வேண்டும். கடவுளிடம் அன்பு காட்டுவோர், பிற மனிதரை அன்பு செய்யாமல், இருக்க இயலாது. ஏனென்றால் எல்லா மனிதரையும் வேறுபாடின்றி அன்பு செய்வது கடவுளின் பண்பு. பாவம் என்பது நம்மை கடவுளிடமிருந்து பிரிக்கின்ற தீய சக்தியாக இருப்பதால், அதை தவிர்த்து வாழ முயற்சிப்போம். தூய வாழ்வு வாழ்வதற்கான வரத்தைக் கேட்டு இத்திருப்பலியில் இணைவோம்.





**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எங்களை ஆசீர்வதித்து அரவணைக்கும் இறைவா, உமது திருஅவையின் மக்களாகிய எங்களை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் ஆசீர்வதியும். இவர்கள் உமது அன்பையும், பராமரிப்பையும் முழுமையாக உணர்ந்து உமது பாதையில் எங்களை வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அனைத்து நற்செயல்களுக்கும் ஊற்றான இறைவா, எங்களை ஆளும் தலைவர்கள், சமூகத்திற்கு நற்செயல்கள் செய்பவர்களாகவும், உமக்குப் பிரியமான பணிகளைச் செய்பவர்களாகவும், ஏழைகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யக்கூடியவர்களாகவும் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. வளர்ச்சியின் ஊற்றே எம் இறைவா, எம் மாணவச் செல்வங்களை, ஆசிரியப் பெருமக்களைப் பாதுகாத்து அவர்களுக்குத் தேவையான உடல், உள்ள, ஆன்ம வளர்ச்சியையும் நல்வாழ்விற்குத் தேவையான ஞானத்தையும் அறிவையும் தந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. இயற்கையின் பாதுகாவலரான இறைவா, எங்கள் அனைவரையும் வளமோடும், சிறப்போடும் வாழவைப்பவரே, உலகமெங்கும் நல்ல மழையைக்கொடுத்து, விவசாயம் செழித்தோங்கவும், இயற்கைச் செல்வங்களை அழிவிலிருந்து பாதுகாத்திடவும் மழைநீரைச் சேமிக்கும் பழக்கம் எல்லோரிடமும் ஏற்படவும் வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2 விசுவாசத்தில் வளர...

## இணை இரட்சகி அன்னை மரியாளின் பிறப்பு

திரு. புல்லோன் ஜோ. லூயிஸ்

மானிடக் குழந்தையின் தாயாம் ஏவாள் சாத்தானின் வலையில் மயங்கி பாவச் சேற்றினைப் பூசிக்கொண்டாள். மனுக்குலச் சுவற்றிலும் அதனையே பூசி கறைப்படியச் செய்தாள். அதனால் கறைபடியா நித்தியத் தாயெனும் நிலையினை இழந்தாள். மாற்றம் என்பது மாறாதது, மாறிவந்தச் சூழலில் "இதோ உமது அடிமை" என்று தன்னை முழுவதும் ஆண்டவருக்கு அர்ப்பணித்து இறைவாழ்விற்குப் புதிய சாசனம் எழுதிய கன்னி மரியாள் நமது மீட்பின் தாய், வாழ்வின் தாய், வாழ்விக்கும் தாய். ஒரு மனிதரால் பாவமும் சாவும் நுழைந்ததுபோல் ஒருவரின் அருளினால் வாழ்வு வந்தது (உரோ 12:14). ஆதாம் சாவுக்கு அழைப்பு விடுத்தான். ஆனால் இயேசுவோ வாழ்வையே கொணர்ந்தார். பாவத்தையும் சாவையும் ஆதாம் உற்பத்தி செய்வதற்கு ஏவாள் உறுதுணையாக இருந்தாள். ஆனால் மீட்பையும், முடிவில்லா வாழ்வையும் இயேசு கிறிஸ்து கொணர்வதற்கு, இதோ உமது அடிமை என்று மரியாள் தன்னை அர்ப்பணித்து, புதிய ஆதாமான இயேசுவுக்கு உற்ற துணையாக, தாயாக இருந்தாள். அதனால் மீட்புப்

பணியில் இயேசு கிறிஸ்துவுடன் துணை நின்றதால், உடன் மீட்பாளர், இறைவனின் துணை நிற்பவள், துணை இரட்சகி என்ற பெயர்களைப் பெறுகின்றாள். மீட்புக்கு வழியான கிறிஸ்துவின் பாதையில் நம்மை நடத்திச் செல்லும் அன்னையானாள். ஆம். கடவுளின் மீட்புத் திட்டம் என்ற பாதையை விட்டுவிலகாமல் கடவுளின் வார்த்தையைக் கேட்டு நடப்பவளாயிருந்தாள்.

இத்தகு இணை இரட்சகியின் பிறப்பு அகிலத்திற்குச் சிறப்பு. இன்றுவரை திருஅவை மூவருக்கு மட்டுமே இனிய பிறப்பின் விழாவைக் கொண்டாடுகிறது. இறைமகன் இயேசுவுக்கு, இயேசுவைப் பெற்றெடுத்த மரியாளுக்கு, இயேசுவின் வழியைச் செப்பனிட்ட திருமுழுக்கு யோவானுக்கு. அதோ 2000 ஆண்டுகளுக்கு முன் மனிதனுக்கு வாக்களிக்கப்பட்ட மீட்பரை மக்களெல்லோரும் ஆவலோடு எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தனர். பாவத்திற்கும், சாத்தானின் மாயக் கவர்ச்சிக்கும் அடிமைப்பட்டிருந்த மனிதத்தை மீட்பதற்காகக் காலம் நிறைவுற்றபொழுது பாவத்தை மன்னிக்கின்றவராகவும், மறுக்கின்றவராகவும், இருளை அகற்றும் ஒளியாகவும், நீதியின் கதிரவனாகவும், இயேசு கிறிஸ்து உதயமாகுமுன் விடியற்காலத்தின் நட்சத்திரமாக அன்னைமரி பிறந்தார். புதிய உடன்படிக்கையாம் கிறிஸ்துவைச் சுமக்க, கிறிஸ்துவை உருவாக்க, ஆணவத்தை அழிக்க அவதரித்த இயேசுவை தனது அடிவயிற்றில் சுமக்க அன்னைப் பிறந்தார். உலக உயிர்கள் அனைத்திற்கும் உயரிய கொடையாக தனக்காகவும், தன்னோடு பிறருக்காகவும் ஆண்டவரை ஈன்றெடுக்க அருளின் அன்னையாக அழைக்கப்பட்டு பிறந்தார். ஆம் கிறிஸ்துவை தன் கருவில் உருவாக்கிட கிறிஸ்துவால் உருவாக்கப்பட்டவர் அன்னை மரி.

தொடக்கக் காலத்தில் கடவுள் தம் மகனை மனிதனாகப் பிறக்கச் செய்திட முடிவெடுத்து அவர் வழியாகவே உலகத்தை மீட்க விரும்பினார். அம்மகனுக்குத் தாயாகும் தகுதி எந்நாட்டு அரசிக்கும் இல்லையென்று மிகவும் தகுதியானப் பெண்ணாக விளங்கிய அன்னை மரியாவைத் தெரிந்துக் கொண்டார். அவர்தாமே அன்னை மரியாவுக்குக் கொடுத்த வரங்களிலெல்லாம் முதன்மையானது, ஜென்மப் பாவமில்லாமல் உற்பவிக்கப்பட்ட வரமே, மற்ற மனிதர்களோடு சேர்ந்து பிறக்கின்ற ஜென்மப் பாவத்தை இறைவன் அன்னையிடத்திலே நீக்கி அந்த மகத்தானத் தன்மையை அன்னைக்கு மட்டுமே வழங்கினார். ஆதிமனிதன் செய்த பாவத்திற்குப் பின் பாம்பினுடையத் தலையை நசுக்கிட இறைவனால் முன் குறிக்கப்பட்டவரும் அவரே.

கடவுளின் தூய இறைமகன் பரிசுத்த தெய்வம் பாவமான உதிரத்தில் கருதரித்து பிறந்தார் என்று சொல்ல முடியுமா? பரிசுத்த தெய்வம் பிறக்க உதவும் உதிரம்கூட பரிசுத்தமாகத்தான் இருக்க வேண்டும். ஒரே ஊற்றிலிருந்து நன்னீரும், உவர் நீரும் சுரக்குமா? அத்திமரம் ஒலிவப் பழங்களையும், திராட்சைச் செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? (யாக். 3:11-12) இது உண்மையென்றால் தெய்வ மகனைத் தாங்கிய கன்னிமரியாவின் உதிரமும் பரிசுத்தமானதே. மரியாளைக் கடவுள்





பாவக்கரையின்றி பிறக்கச் செய்தார். இயேசுவின் இரத்தமே மீட்கிறது என்றால், இயேசு சிந்திய பரிசுத்த இரத்தம் ஒருவகையில் மாதாவின் இரத்தம்தானே. "கடவுளின் மகனாகிய இயேசுவின் இரத்தம் எல்லா பாவத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்தும்" (1யோவா 1:7). எனவே மரியா அமல உற்பவிதான். அன்னை மரியாள் அமல உற்பவியாகப் பிறந்து, தொடர்ந்து மாசில்லாதவராக வாழ்ந்து, "மாசில்லா மனுமகனை மாசகற்றும் இறைமகனாய்" பெற்றெடுத்தாள். அவளது உள்ளத்திலும், உதிரத்திலும் பாவம் குடிகொள்ள இயலவில்லை. அவள் தான் இறைவனின் தாயாக இருப்பதைக் காட்டிலும் விரும்பியது மாசுமறுவில்லாமல் வாழ்வதையே. மாசுமறுவற்ற தன்மையில்தான் "இறைவன் உறைகின்றார், உருபெருகின்றார்" என்ற உண்மையை உணர்ந்தவராய் வாழ்ந்தாள்.

இறைவனின் தாய் உலகோரின் தாயுமானாள். அனைவரையும் ஒன்று சேர்க்கும் அன்னையுமானாள். எலிசபெத்தம்மாளைச் சந்தித்து உறவுகளை வளர்ப்பவராய் வெளிப்படுத்தினார். கானாவூர் திருமணத்தில் கனிவோடு தன் மகனிடம் பரிந்து பேசி வேளையாட்களுக்கு கட்டளையிட்டு ஏற்படவிருந்த இழுக்கிலிருந்து தடுத்தார். ஆண்டவர் இயேசுவைப் பற்றி அவதூறுகள் வந்தபோது அதிர்ச்சியுறாமல், அடக்கமாக இருந்தவள் மரியாள். அன்னை மரியாளின் பிறப்பினைச் சிறப்பிக்கும் அரிய வேளையிலே, மனிதமே, அன்னை மரியாளைப்போன்று அனைவருமே பாவத்தை விட்டு விலகி வாழ்வோம். நம் வாழ்வை அன்னையின் பாதுகாப்பில் அவர் பாதம் வைப்போம். அவரின் பாதுகாப்பில் இறைத்தந்தையே நமக்கு பாதுகாப்பாகிட பாவத்தின் விளைவுகள் தீண்டா வண்ணம் பாவச்சோதனைகளை விலக்கிட, அதற்கான மனஉறுதியைப் பெற்றுத்தந்திட, அன்னை மரியாளின் பரிந்துரையை நாடுவோம். ஆம். நமக்காக எந்நாளும் பரிந்துரைக்கும் அன்புத் தாயாம் மரியாள் நமது வேண்டுதல்களைத் தம் மகனிடம் எடுத்துரைத்து நமக்காகப் பரிந்துரைப்பது உறுதி. அன்னை மரியாளின் பாதுகாவலில் அவரது அன்பு மக்களாக வாழ்ந்து ஆண்டவர் இயேசுவின் வழியில் நடப்போம்.

## அருளாளர் ஜோசப் கலசான்ஸ் - வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

ஜூலை மாதம் 1936ல் ஸ்பெயின் நாட்டில் தேசியவாதிகளுக்கும் கம்யூனிச பிரிவினருக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடந்துக் கொண்டிருந்தது (1936-1939). தொடக்கத்தில் திருஅவைக்கு எதிராக மத வெறிக்கொண்டவர்கள் போரில் பல்வேறு கிறித்துவ ஆலயங்கள், குருமடங்கள், கன்னியர் இல்லங்கள் என தாக்குதல்களைத் தொடுத்தனர். இதில் சில புனிதர்களின் திருப்பண்டங்கள் அழிக்கப்பட்டன, திருஅவையின் பல்வேறு அடையாளங்கள் அழிக்கப்பட்டதுடன் இறைமக்களின் வழிபாடுகளையும் ரத்து செய்தனர். ஆயிரக்கணக்கான திருப்பணியாளர்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொது நிலையினர் ஆகியோர் படுகொலைச் செய்யப்பட்டனர். நம் முன்னாள் திருத்தந்தை புனித

இரண்டாம் யோவான் பவுல், 2000ல் மாபெரும் யூபிலி கொண்டாட்டத்தை முன்னிட்டு, 20ம் நூற்றாண்டின் கிறித்துவ மறைசாட்சிகளின் விபரங்களைச் சேகரித்தார். மார்ச் 2000ல் கொலிசியத்தில் நடத்தப்பட்ட திருவழிபாட்டில் ஸ்பெயினின் மறைமாவட்டங்களும் கலந்து கொண்டன. சுமார் 10,000க்கும் மேலான ஸ்பெயின் நாட்டு கிறிஸ்தவர்கள் மறைசாட்சிகளாய் கொல்லப்பட்டனர். ஸ்பானிஸ் திருஅவையை உலுக்கிய இச்சம்பவத்தில் தொன் போஸ்கோவின் சலேசியர்களுக்கும் சலேசிய கன்னியர்களுக்கும் இது ஒரு பேரிடியாக அமைந்தது. அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர்களில் 93 பேர் சலேசியக்குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்பதில் சிறிது மகிழ்ச்சி என்றாலும் சொல்லொன்னா துயரில் அவர்கள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்ததைப் பார்க்கும்போது நம்மையும் அறியாமல் கண்களில் நீர் கசியத்தான் செய்கிறது.

**வாலென்சியாவின் குழுவினர்**

ஜூலை 21, 1936ல் 11 மறைசாட்சிகளை கண்டது வாலென்சியா. இரவு முழுமைக்கும் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டில் உருக்குலைந்து போனது வாலென்சியாவின் சலேசிய இல்லம். அச்சமயம் சலேசிய மாநிலத் தலைவர் அருட்பணி. ஜோசப் கலாசன்ஸ் அவர்கள் தியானத்தில் கலந்து கொண்டிருந்தார். இவர் 1886ல் தொன் போஸ்கோவை நேரில் சந்தித்த முதல் ஸ்பானிஷ் சலேசியராவார். இந்த இல்லத்தில் இருந்த அனைத்து சலேசியர்களையும் துப்பாக்கி முனையில் ஒன்றாக நிற்கவைத்தனர் கலவரக்காரர்கள். அதில் ஒருவன் "ஏன் அவர்களை சுடவில்லை, எல்லோரையும் கொல்லவே இங்கு வந்தோம் என்பது தெரியாதா உங்களுக்கு"? என்றான். பிறகு அனைவரையும் ஒரு சிறைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்கள் 29ம் தேதி வரை கைதிகளாக இருந்தனர். அதன்பின் எதிர்பாராத வகையில் அனைவரையும் விடுதலைச் செய்தார்கள். மறைச்சாட்சியாகக் கொல்லப்படுவதற்கு முன் இடைப்பட்ட காலங்களில் ஒவ்வொருவருக்கும் நிகழ்ந்த ஒரு தனிப்பட்ட கதை உண்டு.

**குழுத் தலைவர் பணி. ஜோசப் கலாசன்ஸ்**

மறைச்சாட்சிகளான இவர்களது குழுவிற்குத் தலைவர் அருட்பணி. கலாசன்ஸ், ஏனென்றால் 249 சலேசியர்கள், 14 சலேசிய இல்லங்களைக் கொண்ட தராக்கோனென்ஸ் சலேசிய மாநிலத்தின் தலைமைத் தந்தையாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார் அவர். நவம்பர் 1872ல் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் அருட்பணி. ஜோசப் கலாசன்ஸ். பின்னாளில் யாருமின்றி அனாதையாகச் சுற்றி வந்தபோது, பார்சிலோனாவில் ஒரு வீட்டில் பணியாளாக வேலைப்பார்த்து வந்த தனது தூரத்து சகோதரியின் பாதுகாப்பில் வளர்ந்தார். இந்த சகோதரியின் மூலமே தன் கல்விச் செலவுகள், பிறகு கல்லூரிக்கு அனுப்பியது எல்லாமே நிகழ்ந்தன. இங்குதான் 1886ல், தொன் போஸ்கோவை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்நிகழ்வு அவரது எண்ணங்களில் முத்தாய்ப்பாய்





பதிந்த ஒன்றானது. செப்டம்பர் 1889ல் சலேசிய சபையில் சேர்ந்து, அருளாளர் பிலிப் ரினால்டி அடிகளிடமிருந்து தன் முதல் துறவற ஆடையைப் பெற்றார். செப்டம்பர் 1890ல் நித்திய வார்த்தைப்பாட்டுக்குப் பின் 1895ல் சலேசிய குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த முதல் சலேசிய குரு என்ற பெருமைக்குரியவரானார். தன் சலேசிய பணியோடு சேர்த்து திருப்பணியையும் 20 ஆண்டுகள் திறம்பட செய்தார். 1916ல் க்யூபா நாட்டிற்குச் சிறப்புப் பணிக்காக அனுப்பப்பட்டார். ஆறு ஆண்டுகளுக்கு பின் பெரு மற்றும் பொலிவியா சலேசிய மாநிலங்களின் தலைமைத் தந்தையாக பணியமர்த்தப்பட்டார். அதன்பின் 1925ல் மீண்டும் ஸ்பெயினுக்குத் திரும்பப் பெறப்பட்டு, தராக்கோனென்ஸ் சலேசிய மாநிலத்தின் தலைமைத் தந்தையாக பணியாற்றினார்.

கனிவன்புடன் பழகும் குணமுடைய அருட்பணி. ஜோசப் கலாசன்ஸ் அனைவராலும் போற்றப்பட்டு அன்பு செய்யப்பட்டவர். அவரின் நிர்வாகத் திறமை மற்றும் உடனிருத்தலின் தன்மை அனைத்தும் அவருக்கென ஒரு பாணியை மக்களிடத்தில் உருவாக்கின. தந்தைக்குரிய பாசத்தினால் அவரை எல்லோரும் "இன்னொரு தொன் போஸ்கோ" வாகவே கண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜூலை 21, 1936ல் வெலென்சியா சலேசிய மாநிலத்தில், அங்குள்ள சலேசியர்களுக்குத் தியானம் வழங்கிக் கொண்டிருந்தார் அருட்பணி. ஜோசப். அப்போது அவர் அதன் மாநிலத் தலைமைத் தந்தையும் ஆவார். அங்கு வந்த கலகக்காரர்கள் அவரையும் அங்கிருந்த சலேசியர்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு சென்று சிறையிலடைத்தனர். ஒரு வாரத்திற்கு பின் அனைவரையும் விடுவித்தார்கள்.

ஆனால் மீண்டும் ஜூலை 29, 1936ல் பணி.ஜோசப் கலாசன்ஸ் மற்றும் அவரோடு இரண்டு வேறு சலேசியர்களையும் கைது செய்து போராட்டக்காரர்களின் தலைமையிடத்திற்குக் கொண்டு சென்றார்கள். பணி.ஜோசப் அவர்களின் பையில் வைத்திருந்த அங்கியைப் பார்த்த ஒருவன், "இவன் ஒரு குருவானவன். இவனைக் கொல்ல வேண்டும்" என்றான். இதற்கு முன் தான் ஒரு சலேசிய குரு என்று அவர்களிடம் சொல்லியிருந்தார் பணி. ஜோசப் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் அனைவரையும் ஒரு வாகனத்தில் வலுக்கட்டாயமாக ஏற்றி வெலென்சியாவில் உள்ள சிறைக்குக் கொண்டு சென்றார்கள். வழியிலேயே ஒருவன் அருட்பணி. ஜோசப் கலாசன்ஸ் அவர்களின் முகத்துக்கு நேராக துப்பாக்கியை வைத்து சுட்டான். "என் தேவனே" என்றபடியே அருட்பணி. ஜோசப் இரத்த வெள்ளத்தில் விழுந்து மடிந்தார். கிறிஸ்துவின் மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையின் பேரிலும் இறைப்பணி செய்ததன் மூலமும் தனது இன்னுயிரை கிறிஸ்துவுக்காக இழந்தார். சலேசிய அழைப்பின் முன்மாதிரியாகவும், கடவுளிடம் கொண்ட முழு நம்பிக்கையினால் கொலைக்காரர்களை மன்னித்தலில் முன்னோடியாகவும் திகழ்ந்தவர் அருட்பணி. ஜோசப் கலாசன்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

அச்சிறப்புக்குரியவரை சலேசியர்கள் செப்டம்பர் 22ம் நாளில் நன்றியோடும் பாசத்தோடு நினைவு கூறுகிறார்கள். திருஅவை அருட்பணி. ஜோசப் கலாசன்ஸ் அவர்களை மார்ச் 11, 2001ல் அருளாளர் நிலைக்கு உயர்த்தியது. மற்றவர்களை 28 அக்டோபர் 2007ல் அருளாளர்களாக அறிவித்தது.

## வானதூதர் வழியாகப் பேசும் இறைவன்

திரு. விக்டர்

நம் ஆண்டவராகிய இயேசுவின் திருப்பெயரால் உங்களை வாழ்த்துகிறேன். அவரது ஆசியனைத்தும் உங்களோடு இருப்பதாக. நமது கத்தோலிக்கத் திருஅவையின் வழிபாட்டு அட்டவணைப்படி செப்டம்பர் மாதம் 29ம் நாளை வானதூதர்களின் நினைவு நாளாகச் சிறப்பித்து வருகின்றோம்.

**யார் இந்த வானதூதர்கள்?**

நாம் ஆராதிக்கும் ஆண்டவராகிய கடவுள் உருவமற்றவர், யாரும் அணுக முடியாத ஒளியில் வாழ்பவர், அவரைக் கண்டவர் எவரும் இலர், காணவும் முடியாது (1திமொ. 6:16). இந்தக் கடவுளை யாருமே கண்டதில்லை (யோவா 1:18) அவர் ஒளியை ஆடையென அணிந்திருப்பவர். (திபா. 104:2) அப்படிப்பட்ட கடவுள் தாம் படைத்த மனிதரோடு உறவாட விரும்பினார், உரையாட விரும்பினர், உறவு கொள்ள விரும்பினார். தமது திட்டங்களையெல்லாம் அவன் மூலம் செயல்படுத்த விரும்பினார். எனவே தனக்கும் மனிதனுக்கும் இணைப்புப் பாலமாக இருக்கும்படி தான் படைத்த, தன்னோடு இருக்கும் வானதூதர்களைப் பயன்படுத்தினார். இந்த வானதூதர்கள் கடவுளின் வாயாக இருந்து அவரது கட்டளைகளை மனிதர்களிடம் எடுத்துரைத்தனர். இந்த வானதூதர்கள் கடவுள் தரும் மீட்பைப் பெற்றுக்கொள்ளப் போகிறவர்களுக்குத் தொண்டாற்றுவதற்காக அனுப்பப்பட்ட ஊழியம் புரியும் ஆவிகளாய் இருக்கிறார்கள். அவர் திருமுன் எப்போதும் இருப்பவர்கள் (மத் 18:10). தமக்குப் பணிவிடைச் செய்யும் பணியாளர்களான வானதூதரை காற்றுகளாலும், தீப்பிழம்புகளாலும் நிரப்பினார். ஆண்டவர் (எபி.1:7) இதிலிருந்து கடவுள் தமது வான தூதர்களை எவ்வளவு வல்லமையாய்ச் செயல்பட வைக்கிறார் என்று அறிய முடிகிறது. பழைய ஏற்பாடு முழுவதிலும் கடவுள் தமது வானதூதர்கள் வழியாகவே பேசியுள்ளார்.

**பழைய ஏற்பாட்டில் வானதூதர்கள்**

முதன் முதலாக கடவுள் வானதூதர்கள் வழியாகப் பேசியதைத் தொடக்க நூலில் அறியலாம். ஆபிரகாமுக்குக் குழந்தை இல்லாத நிலையில், மனைவி சாராளின் ஆலோசனைப்படியும், அவரது விருப்பப்படியும் அவளது பணிப்பெண் ஆபிரகாமுக்கு மனைவியாகக் கொடுக்கப்படுகிறாள். அவளும் கருவுற்றாள். கறுவுற்ற அவள் தன் தலைவி சாராளை அலட்சியப்படுத்துகிறாள். அதனிமித்தம் சாராள் அவளைக் கொடுமைப்படுத்த அவளே வீட்டைவிட்டு வெளியேறி பாலைநிலத்தில்





அலைந்து திரிந்து ஆண்டவரை நோக்கி அழுதபொழுது ஆண்டவர் தமது வானதூதர் மூலம் அவளோடு பேசி, "அவளுக்கு ஒரு ஆண் குழந்தைப் பிறக்குமென்றும், அக்குழந்தைக்கு "இஸ்மயேல்" என்று பெயரிடுவார். உன் வழிமரபினரை எண்ணமுடியாத அளவு பெருகச் செய்வேன்" என்றும் கடவுளின் வாக்குறுதியை அவளுக்கு வழங்கினார் (தொ.நூ. 16:1-11). இப்படி கடவுள் ஆகாரிடம் தாம் பேச விரும்பியதைத் தமது வானதூதர் மூலம் பேசினார்.

அடுத்ததாக, சோதோம், கோமோரா நகர்களில் பொல்லாப்பும், பாவமும் பெருகின. அதைக் கண்ட ஆண்டவர் அந்நகர்களை அழிக்க தமது மூன்று வானதூதர்களை அனுப்பி வைத்தார். அவர்கள் முதலில் ஆபிரகாமிடம் வந்து விருந்துண்டு அவருக்கு "விரைவில் ஒரு ஆண் மகன் பிறப்பான்" என்ற நற்செய்தியை அறிவித்துச் சென்றனர் (தொ.நூ. 18:14). உன் வழிமரபினரை வானத்து நட்சத்திரங்களைப் போல் பெருகச் செய்வேன் என்று ஆபிரகாமுக்கு வாக்களித்திருந்த கடவுள் (தொ.நூ. 15:5) எப்பொழுது குழந்தை பிறக்கும் என்ற செய்தியைத் தமது வான தூதர்கள் மூலமாக இங்கு அறிவிப்பதை நாம் காணலாம். அதன் பிறகு அந்தத் தூதர்கள் சோதோம், கோமோரா நகர்களுக்குச் சென்று கடவுளின் கட்டளைப்படி "லோத்து" குடும்பத்தை மட்டும் காப்பாற்றி, அந்நகர்களை அழிக்கின்றனர். வானதூதர்கள் விடுத்த எச்சரிக்கையை மீறின லோத்தின் மனைவி தவிர மற்றவர்கள் காப்பாற்றப்பட்டனர். லோத்தின் மனைவியோ உப்புத்தூணாக மாறினார் (தொ.நூ. 19:24-26). இவ்விதம் கடவுள் தமது வானதூதர்கள் வழியாகப் பேசி செயல்பட்டார். இஸ்ரயேல் மக்கள் எகிப்து நாட்டில் 400 வருடங்கள் அடிமைகளாக இருந்தனர். அவர்களின் வேதனைகளைக் கண்ட கடவுள் அவர்களை விடுவிக்க விரும்பி "மோசே"யை உருவாக்கினார். ஏற்ற நாளில் மோசேயை அப்பணிக்கு அழைத்தார். ஒரேப் மலையில் எரியும் முட்செடியில் தமது தூதர் வழியாக மோசேவுக்கு காட்சி தந்து, பேசி அவரை சம்மதிக்க வைத்தார் (வி.ப. 3:2).

**புதிய ஏற்பாட்டில் வானதூதர்**

புதிய ஏற்பாட்டின் தொடக்கத்திலேயே கடவுள் தமது வானதூதர் வழியாய் பேசியவை அறியலாம். மரியாள் யோசேப்புக்கு மண ஒப்பந்தமாகியிருந்தாள். அவர்கள் கூடி வாழும் முன்பே கடவுளின் தூதர் கபிரியேல் மரியாளிடம் அனுப்பப்பட்டார். "அருள் மிகப்பெற்றவளே வாழ்க" என்று கடவுளின் வாழ்த்தைக் கூறிய தூதர் கடவுளின் திட்டத்தையும், அவளிடம் இயேசு எப்படி பிறப்பார் என்கிற செய்தியையும் எடுத்துரைத்தார். மரியாளின் சந்தேகத்திற்கும் விளக்கமளித்தார் (லூக். 1:26-37). மரியாளுக்குத் தூதுரைக்கும் முன்பு இதே கபிரியேல் தூதர் யோவானின் தந்தை சக்கரியாவுக்குத் தூதுரைத்து யோவானின் பிறப்பு குறித்தும் அவரது பணிகுறித்தும் கடவுளின் திட்டத்தை வெளிப்படுத்தினார் (லூக். 1:13). மரியாளோடு பேசின வானதூதரின் செயல்பாடு அவரோடு நின்று விடவில்லை. திருமணத்திற்கு முன்பே மரியாள் தாய்மையடைந்ததை

அறிந்த அவரது கணவர் யோசேப்பு அவளை மறைவாய் விலக்கிவிட எண்ணினார். அவர் இவ்வாறு சிந்தித்துக்கொண்டு இருந்த வேளையில் கடவுளின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி "யோசேப்பே தாவீதின் மகனே, உன் மனைவி மரியாளை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். அவள் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான்" (மத் 1:20) என்று தெளிவுப்படுத்தி அவர் மரியாளை ஏற்றுக்கொள்ளச் செய்தார். அதுமட்டுமன்று ஏரோது மன்னன் குழந்தை இயேசுவைக் கொலைச் செய்யத் தேடுகையில், மீண்டும் கடவுளின் தூதர் யோசேப்புக்குக் கனவில் தோன்றி எகிப்து நாட்டுக்குக் குழந்தையையும், தாயையும் அழைத்துக்கொண்டு தப்பிச் செல்லுமாறு கட்டளையிட்டிருக்கின்றார் (மத் 2:13). பின்பு சில காலம் கழித்து, ஏரோது மன்னன் இறந்த பிறகு மறுபடியும் கடவுளின் தூதர் யோசேப்புக்குக் கனவில் தோன்றி, "எகிப்திலிருந்து திரும்பி வரச் செய்கின்றார் (மத். 2:20).

இயேசு திருமுழுக்குப் பெற்று தீயோனால் 40 நாட்கள் சோதிக்கப் பட்டு, பிசாசை வெற்றிகண்ட பிறகு வானதூதர்கள் அவருக்குப் பணிவிடைப் புரிந்தனர். மேலும் இயேசு சிலுவையில் மனிதர்களின் பாவங்களுக்காக இரத்தம் சிந்தி மரித்து அடக்கம் செய்யப்பட்டு உயிர்த்தெழுந்தபோது அந்த உயிர்ப்பின் செய்தியை அறிவித்ததும் அங்கிருந்த வானதூதர்கள்தான் (மத்.28:5-7). இயேசு விண்ணகம் சென்ற பிறகு ஆட்சியாளர்கள் வான தூதர்களைக் கைது செய்து தண்டிக்கத் துவங்கினர். யாக்கோபை அவ்வாறு கைது செய்து கொலையும் செய்தனர். பேதுருவையும் கைது செய்து சிறையில் சங்கிலிகளால் கட்டிவைத்தனர். ஆனால் மீட்கப்பட்ட சீடர் கூட்டம் அவருக்காக கடவுளிடம் மன்றாடினர். அவ்வேளையில் கடவுளின் தூதர் சிறைச்சாலைக்குச் சென்று "பேதுருவைத் தட்டியெழுப்பி, உடனே எழுந்திரும்" என்று கூற சங்கிலிகள் அறுந்து விழுந்தன, கதவுகள் தானாகத் திறந்துகொண்டன. அவரை வெளியில் அழைத்து வந்த கடவுளின் தூதர், பிறகு மறைந்துவிட்டார் (திப. 12:7-9). இவ்வாறு தன்னுடைய வானதூதர் வழியாகப் பேசி இறைவன் பேதுருவை விடுவித்தார்.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

### நவீன காலத்தின் உன்னத திருத்தந்தை

விரைவில் புனிதராக அறிவிக்கப்படவுள்ள அருளாளர் திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள், "நவீன காலத்தின் மிக உன்னதத் திருத்தந்தை" என குறிப்பிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ். இவ்வாண்டு அக்டோபர் மாதம் 14ம் தேதி வத்திக்கானில் இடம்பெற உள்ள சிறப்புத் திருப்பலியில் அருளாளர் ஆறாம் பவுல் அவர்களைப் புனிதராக அறிவிக்க உள்ளது திருஅவை. 1897ம் ஆண்டு இத்தாலியின் Concesio என்னுமிடத்தில் பிறந்த திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் நடந்துகொண்டிருந்தபோது 1963ம் ஆண்டு திருத்தந்தையாக பொறுப் பேற்று 1978ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6ம் தேதி காலமானார்.





### இளையோர் உலக நாளில் பங்கேற்க 105 நாள் கடல்பயணம்

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 17இளையோர் 2019ம் ஆண்டு சனவரி மாதம் பனாமா நாட்டில் நிகழவிருக்கும் இளையோர் உலக நாள் நிகழ்வுகளில் கலந்துக்கொள்ள மூன்று படகுகளில் 105 நாள் கடல்பயணம் மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர் என்று இத்தாலிய இதழ் கூறியள்ளது. நான்கு கடல்பயண வல்லுநர்கள் மற்றும் ஓர் ஆன்மீக வழிகாட்டியுடன் பிரான்ஸ் நாட்டின் Brest துறைமுக நகரிலிருந்து ஆகஸ்ட் 31ம் தேதி 17 இளையோர் தங்கள் பயணத்தைத் துவங்கவுள்ளனர். பிரான்ஸ் நாட்டு ஆயர் பேரவையில் இளையோர் பணிக்கு பொறுப்பான ஆயர் Marc Aillet அவர்களின் ஆசியுடன் தங்கள் கடல் பயணத்தைத் துவக்கும் இளையோர் ஸ்பெயின் நாட்டின் Santiao de Compostela திருத்தலத்திலும் போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா அன்னை திருத்தலத்திலும் தங்கிச் செல்கின்றனர். ஆபத்துக்கள் நிறைந்த இந்தக் கடல் பயணத்தில் ஒவ்வொரு நாளும் செபமாலை, விவிலிய வாசகம் மற்றும் தனிப்பட்ட தியானங்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதென்றும் தங்கள் பயணத்தில் பானமா பேராயர் Jose Domingo Ulloa Mendieta அவர்கள் வழங்கிய அந்திகுவா அன்னை மரியாவின் திரு உருவம் தங்களுடன் பயணம் செய்யும் என்றும் இவ்விளையோர் கூறியுள்ளனர்.

### பீடப்பணியாளர்கள் திருத்தூதர்களாக வாழ அழைப்பு

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த 70000த்திற்கும் அதிகமான பீடப்பணியாளர்களுக்கு ஒரு குறுகிய உரையை வழங்கினார். புனிதராவதற்கு இயேசு வகுத்துள்ள வழி குறித்தும் இரக்கத்தின் செயல்கள் குறித்தும் ஓர் இளையவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளித்த திருத்தந்தை புனிதத்தில் வளர இயேசு வழங்கிய ஒரே வழி அயலவரின் அன்பு என்பதை தெளிவுப்படுத்தி அயலவரின் தேவைகளை நிறைவேற்றும் நாம் புனிதர்களாக மாறும் வரம் பெறுகிறோம் என்று எடுத்துரைத்தார்.

### அர்ஜென்டினாவில் கருக்கலைத்தலைச் சட்டமாக்கும் முயற்சி தோல்வி

அர்ஜென்டீனா செனட் அவையில் நிகழ்ந்த விவாதத்தின் இறுதியில் கருக்கலைத்தலை சட்டமயமாக்கும் முயற்சி தோல்வியடைந்தது. அர்ஜென்டீனா நாட்டைச் சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் கருக்கலைத்தலை சட்டமாக்கும் முயற்சிக்கு எதிராகக் குரல் கொடுத்ததற்கு அந்நாட்டு செனட் அவை செவிமடுத்துள்ளது என்று வாழ்வை ஆதரிக்கும் பாப்பிறைக் கழகத்தின் தலைவரான பேராயர் வின்சென்சோ பாலியா அவர்கள் வத்திக்கான் செய்திக்கு அளித்த பேட்டியில் கூறினார். சட்டமாக்கும் விவாதம் செனட் அவையில் நடைபெற்றுவந்த வேளையில் இந்த அவையின் உறுப்பினர்களுக்கு புவனஸ் அயிரஸ் பேராயர் கர்தினால் Poli அவர்கள் இந்த விண்ணப்பத்தை விடுத்தார். சமுதாயத்தில் நலிவுற்ற மக்களைக் காக்கவே பாராளுமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும், கருவில் வளரும் உயிர் பாதுகாப்பு ஏதுமற்ற ஓர் உயிர் என்றும் கர்தினால் Poli அவர்கள் தன் விண்ணப்பத்தில் வலியுறுத்திக் கூறினார்.

## மரண தண்டனைக் குறித்த மறைக்கல்வியில் மாற்றங்கள்

மரண தண்டனைக் குறித்து கத்தோலிக்க மறைக்கல்வி 2267 என்ற பிரிவில் இதுவரை கூறப்பட்டு வந்த கருத்துக்களில் மாற்றங்களை உருவாக்கி திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயம் மாற்றப்பட்ட புதிய கருத்துக்களை வெளியிட்டுள்ளது. மரண தண்டனைக் குறித்த பழைய மறைக்கல்வி கருத்து நீதியான முறையில் அமைக்கப்பட்ட அதிகாரிகள் நேர்மையான வழக்கை நடத்தி அதன் இறுதியில் வழங்கிய மரண தண்டனை ஒருவர் செய்த மிகக் கொடிய குற்றத்திற்கு தகுதியான தண்டனை என்று மறைக்கல்வி 2267எண் இதுவரைக் கூறி வந்தது. மரண தண்டனைக் குறித்த புதிய மறைக்கல்வி கருத்து தீவிரமான குற்றங்களை ஒருவர் செய்திருந்தாலும் அவரது மனித மாண்பு அக்குற்றங்களால் எவ்வகையிலும் குறைவதில்லை என்றும் தீவிரக் குற்றங்கள் புரிவோரை மக்களிடமிருந்து பிரித்து காவலில் வைப்பதில் தகுந்த வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் காவலில் வைக்கப்பட்டிருப்போர் மனம் திருந்தும் வாய்ப்புகள் உண்டு என்றும் மறைக்கல்வி 2267என்ற பிரிவில் புதிதான எண்ணங்கள் கூறப்பட்டுள்ளன. மரண தண்டனையை அறவே ஒழிப்பதில் இந்த எண்ணங்களின் அடிப்படையில் மனித மாண்பு எந்தச் சூழலிலும் சிதைக்கப்படக் கூடாது என்பதில் திருஅவை உறுதியாக உள்ளது என்றும், மரண தண்டனை இந்த மாண்பைக் குலைப்பதால் அதனை உலகெங்கும் ஒழிப்பதற்கு திருஅவை முயற்சிகள் மேற்கொள்ளும் என்றும், இந்த புதிய திருத்தங்களில் கூறப்பட்டுள்ளன.

## இந்திய ஆயர்களின் நீதி ஞாயிறு செய்தி

இந்திய கத்தோலிக்கத் திருஅவை ஒவ்வோர் ஆண்டும் இந்திய சுதந்திர தினத்திற்குப் பின்வரும் ஞாயிறை நீதி ஞாயிறாகக் கடைப்பிடிக்கின்றது. நான் உன்னை மதிக்கிறேன் என்ற தலைப்பில் இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் நீதி, அமைதி மற்றும் வளர்ச்சி பணிக்குழு அலுவலகம் நீதி ஞாயிறு செய்தியை வெளியிட்டுள்ளது.

## திருச்சி ஆயர் டிவோட்டா அவர்களின் பணி ஓய்வு ஏற்பு

இந்தியாவில் திருச்சிராப்பள்ளி மறைமாவட்ட ஆயர் ஆன்டனி டிவோட்டா அவர்களின் பணி ஓய்வை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார். 1943ம் ஆண்டு ஜூன் 30ம் தேதி சென்னை சாந்தோமில் பிறந்த ஆயர் ஆன்டனி டிவோட்டா அவர்கள் 1971ம் ஆண்டு ஆகஸ்ட் 27ம் தேதியன்று சென்னை மயிலை உயர்மறைமாவட்டத்திற்கென அருள்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். திருச்சி மறைமாவட்ட ஆயராகப் பணியை ஏற்பதற்கு முன்னர் சென்னை மயிலை உயர்மறைமாவட்டத்தின் தலைமைக் குருவாகவும் பணியாற்றி இருக்கின்றார் ஆயர் ஆன்டனி டிவோட்டா. 1606ம் ஆண்டில் கொச்சின் மறைமாவட்டத்திலிருந்து மதுரை மறைப்பணித்தளமாக மாறிய திருச்சி மறைமாவட்டம் 1886ம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதி மதுரை மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டது. பின் 1887ம் ஆண்டு அக்டோபர் 21ம் தேதி திருச்சிராப்பள்ளி மறைமாவட்டமாகப் பெயர் மாற்றப்பட்டது.





## சுடர் வாசகர் போட்டி - 50 சரியான விடைகள்

1. அருளாளர் அகஸ்துஸ் பார்த்து தொன்பர்பேரிஸ் கூறியது
2. என் அன்பார்ந்த மகன் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்
3. யோவான் 6: 51
4. 71 அல்லது 72 ஆண்டுகள்
5. இயேசு பர்த்தலமேயுவைப் பார்த்துக் கூறியது
6. தந்தை பதிரீசியுஸ் தாய் மோனிகா
7. திருத்தந்தை 11ம் பத்திநாதர்
8. புனித அல்போன்ஸ் லிகோரி
9. தந்தை: லடிஸ்லாஸ் தாய்: மரிய அம்பாரோ
10. தூய மரிய வியான்னி
11. சுதந்திர தின விழா
12. மரியாள் விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டப்பட்டதை தியானிப்போம்
13. 1969ம் ஆண்டு விமான விபத்தில்
14. புனித அகுஸ்தினார்
15. நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே ஆகட்டும்

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்**

1. A. Sagaya Lousia Jenat, K.K.Nagar, Chennai
2. Mr. Vijai Issac, Chennai
3. Sr. Arockia Mary, Coimbatore

## சுடர் வாசகர் போட்டி - 51

1. கன்னிமரியாவை எத்தனை வயதில் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்?
2. திருச்சிலுவை யாருடைய அடையாளமாகக் கொண்டாடப்படுகிறது?
3. இராபர்ட் பெல்லார்மின் பெல்ஜியம் நாட்டிலுள்ள எந்த பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட்டார்?
4. மரியாளின் ஏழு வியாகுலங்களின் விழா என்று யாரால் அழைக்கப் பட்டது?
5. நான் யார் என்ற இயேசு கேட்ட கேள்விக்கு நீரே மெசியா என்று பதில் கூறியவர் யார்?
6. மிக்கேல், கபிரியேல், இரபேல் இத்தூதர்களின் பெயர்களின் பொருள் என்ன?
7. செப்டம்பர் மாதம் 29ம் நாளை யாருடைய நினைவு நாளாக கொண்டாடுகிறோம்?
8. நற்செய்தியை வார்த்தையாலும் எழுத்தாலும் அறிவித்தவர் யார்?
9. அருளாளர் ஜோசப் கலசான்ஸ் நினைவு நாளை எப்பொழுது கொண்டாடுகிறோம்?
10. உலக நாளில் பங்கேற்க இளையோர்கள் எத்தனை நாட்கள் கடல் பயணம் மேற்கொள்கின்றனர்?
11. இயேசுவின் பெயரால் பேய் ஓட்டுவதை கண்டு தடுக்க முயன்றவர்கள் யார்?
12. பெண்களுக்கென "பிறரன்புச் சகோதரிகள்" சபையை தோற்றுவித்தவர் யார்?
13. அருட்பணி ஜோசப் கலசான்ஸ் எந்த ஆண்டு பிறந்தார்?
14. எல்லா மனிதரையும் வேறுபாடின்றி அன்பு செய்வது யாருடைய பண்பு?
15. உரோமையர் 12ம் அதிகாரம் 14ம் வசனம் எதைப்பற்றிக் கூறுகிறது?

**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................





## அடுத்த சுடரில்

**பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி**

01.10.2018 குழந்தை இயேசுவின் புனித தெரேசா
02.10.2018 தூய காவல் தூதர்கள்
04.10.2018 புனித பிரான்சிஸ் அசிசியார்
05.10.2018 புனித ஆல்பர்ட் மர்வெல்லி
07.10.2018 ஆண்டின் பொதுக்காலம் 27-ஆம் ஞாயிறு
13.10.2018 அருளாளர் அலெக்சாண்டிரீனா மரிய தா கோஸ்தா
14.10.2018 ஆண்டின் பொதுக்காலம் 28-ஆம் ஞாயிறு
16.10.2018 புனித மார்கிரேட் மரி அலக்காக்
17.10.2018 அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார்
18.10.2018 புனித லூக்கா நற்செய்தியாளர் விழா
21.10.2018 ஆண்டின் பொதுக்காலம் 29-ஆம் ஞாயிறு
22.10.2018 புனித திருத்தந்தை 2ம் ஜான்பால்
24.10.2018 புனித லூஜி குவனெல்லா
28.10.2018 ஆண்டின் பொதுக்காலம் 30-ஆம் ஞாயிறு
29.10.2018 அருளாளர் தொன் மைக்கேல் ரூவா

**பகுதி 2: விசுவாசத்தில் வாழ...**

செபமாலை வழியில் ஜெயம் பெறுவோம்
அருளாளர் அலெக்சாண்டிரீனா மரிய தா கோஸ்தா-வாழ்வு தரும் பாடம்
விண்ணிலிருந்து விழும் ரோஜா மலர் - குழந்தை இயேசுவின் புனித தெரசா
திருச்சபை செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை செப்டம்பர் 20ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## செப்டம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ச | | 1கொரி. 1: 26-31 | மத். 25:14-30 |
| 2 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 22ம் ஞாயிறு | I. இ.ச. 4: 1-2,6-8<br>II. யாக். 1: 17-18,21-22,27 | மாற்கு 7:1-8,14-15, 21-23 |
| 3 | தி | புனித பெரிய கிரகோரியார் | 1கொரி. 2:1-5 | லூக். 4:16-30 |
| 4 | செ | | 1கொரி. 2: 10-16 | லூக். 4:31-37 |
| 5 | பு | கொல்கத்தாவின் புனித அன்னை தெரேசா | 1கொரி. 3: 1-9 | லூக். 3:38-44 |
| 6 | வி | | 1கொரி. 3: 18-23 | லூக். 5:1-11 |
| 7 | வெ | | 1கொரி. 4: 1-5 | லூக். 5:33-39 |
| 8 | ச | தூய கன்னிமரியின் பிறப்புப் பெருவிழா (ஆரோக்கிய அன்னை) விழா | மீக்.5:2-5(அ)உரோ.8:28-30 | மத்.1:1-16,18-23 |
| 9 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 23ம் ஞாயிறு | I. எசா. 35: 4-7<br>II. யாக். 2: 1-5 | மத்.7: 31-37 |
| 10 | தி | | 1கொரி. 5: 1-8 | லூக். 6:6-11 |
| 11 | செ | | 1கொரி. 6: 1-11 | லூக். 6:12-19 |
| 12 | பு | புனித மரியாவின் திருப்பெயர் | 1கொரி. 7: 25-31 | லூக். 6:20-26 |
| 13 | வி | புனித ஜான் கிறிசோஸ்தம் | 1கொரி. 8: 1-7,11-13 | லூக். 6:27-38 |
| 14 | வெ | திருச்சிலுவையின் மகிமை விழா | I. எண். 21:4-9<br>II. பிலி. 2:6-11 | யோவா. 3: 13-17 |
| 15 | ச | புனித மரியன்னையின் துயரங்கள் (வியாகுல மாதா) | 1கொரி. 10: 14-18 | யோவா. 19:25-27 |
| 16 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 24ம் ஞாயிறு | I. எசா. 50: 5-9<br>II. யாக். 2: 14-18 | மாற்கு 8: 27-35 |
| 17 | தி | புனித இராபர்ட் பெல்லார்மின் | 1கொரி. 11: 17-26 | லூக். 7:1-10 |
| 18 | செ | | 1கொரி. 12:12-14,27-31 | லூக். 7:11-17 |
| 19 | பு | புனித ஜனுவாரியுஸ் | 1கொரி. 12: 31-13:13 | லூக். 7:31-35 |
| 20 | வி | புனித ஆன்ட்ரூ கிம் தெகோன் | 1கொரி. 15: 1-11 | லூக். 7:36-50 |
| 21 | வெ | புனித மத்தேயு திருத்தூதர் | எபே. 4: 1-7,11-13 | மத். 9:9-13 |
| 22 | ச | | 1கொரி. 15: 35-37,42-49 | லூக். 8:4-15 |
| 23 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 25ம் ஞாயிறு | I. சா.ஞா. 2:17-20<br>II. யாக். 3:16-4:3 | மாற்கு 9:30-37 |
| 24 | தி | | நீமொ.3: 27-35 | லூக். 8:16-18 |
| 25 | செ | | நீமொ. 21: 1-6,10-13 | லூக். 8:19-21 |
| 26 | பு | புனித கோஸ்மாஸ், புனித தமியான் | நீமொ. 30:5-9 | லூக். 9:1-6 |
| 27 | வி | புனித வின்சென்று தெ பால் | ச.உ. 1: 2-11 | யோவா. 9:7-9 |
| 28 | வெ | புனித வென்செஸ்லாஸ், புனித லாரன்ஸ் ரூயிஸ் | ச.உ. 3:1-11 | லூக். 9:18-22 |
| 29 | ச | தூய மிக்கேல், கபிரியேல், இரபேல் அதிதூதர்கள் | தானி. 7: 9-10,13-14<br>(அ) திவெ. 12: 7-12 | யோவா. 1: 47-51 |
| 30 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 26ம் ஞாயிறு | I. எண். 11:25-29<br>II. யாக்.5:1-6 | மாற்கு 9:38-48 |